Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 04 வெள்ளிக்கிழமை (19.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 080

# அபிவிருத்தியை விடாது தொடர கைகோர்த்து செயற்படுவோம்

## வடக்கு மக்களுக்கு ஜனாதிபதி அழைப்பு



(முல்லைத்தீவு)

இன, மத பேதங்களை கைவிட்டு அபிவிருத்தியுடன் கூடிய வளமான நல்லதொரு இலங்கையை கட்டியமைக்க அனைவரும் கைகோர்த்து முன்னோக்கிச் செல்வோம் வாருங்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

உங்கள் பகுதிக்கு வந்து உங்கள் மத்தியில் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பௌத்த குருமார் மற்றும் அனைத்து சமய பெரியார்களிடமும் ஆசிர்வாதம் பெற்றவனாக உரையாற்ற விரும்புகிறேன்.

குறிப்பாக 30 வருட காலமாக நீங்கள் இருளில் மூழ்கியிருந்தீர்கள். இந்த 30 வருட காலத்தில் நீங்கள் பல்வேறு கஷ்டங்களை, துன்பங்களை அனுபவித்தீர்கள். உங்களது வாழ்க்கை குறித்தும், உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை குறித்தும் ஏன் உங்கள் எதிர்கால வாழ்க்கை குறித்தும் உங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இருக்கவில்லை.

கடந்த ஐந்து வருடங்களில் அந்த நிலைமையை மாற்றி உங்களுக்கு அச்சமில்லாத அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். கடந்த கால

19 ஆம் பக்கம் பார்க்க

## பாரபட்சமற்ற அபிவிருத்தி வடக்கின் எழுச்சிக்கு அதுவே காரணம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

தமிழ் பேசும் மக்களனைவரையும் ஒரே நாட்டவர் என்ற ரீதியில் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இணையாக பராமரித்து வருபவர் என்பதுடன் பாரபட்சமற்ற அபிவிருத்தி செய்பவரும் எமது ஜனாதிபதியே எனவும், இதனால் வடபகுதி எழுச்சி அடைந்துள்ளது எனவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் 2015, ஐந்தாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சொன்னதை செய்து கொண்டிருப்பவரும் செய்ததை சொல்பவருமான ஒருசெயற்பாட்டாளராக இருக்கும் ஒரு செயற்பாட்டாளரையே

19 ஆம் பக்கம் பார்க்க

## சனத்திரள் மத்தியில் ஜனாதிபதி கிளிநொச்சியில் வரவேற்பு



(கிளிநொச்சி)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் ஜனாதிபதியை ஆதரித்து பெருந்திரளான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வருகைதந்த ஜனாதிபதியை மக்கள் தமது கரகோஷங்கள் மூலம் அமோக வரவேற்பளித்தனர். இக்கூட்டத்தில் பாரம்பரிய

19 ஆம் பக்கம் பார்க்க

## நியதிச் சட்டங்களை உருவாக்க தாமதம் ஏன்?

### வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

நிதி இல்லை, ஆளணிப் பற்றாக்குறை என்று காரணம் கூறாமல் அர்ப்பணிப்புடன் நியதிச் சட்டங்களை துரிதமாக உருவாக்க வேண்டுமென தெரிவித்தார் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

நேற்று கைதடியிலுள்ள வடமாகாண சபையின் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற வடமாகாண சபைக்கான 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் 2 ஆம் நாள் அமர்வின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நியதிச் சட்டங்கள் என்பது மிக

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மீண்டும் வடக்கிற்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி ஜனாதிபதி மீண்டும் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். யாழ். நகரில் இடம்பெறவிருக்கும் பொதுக்கூட்டமொன்றில் அவர் உரை நிகழ்த்தவுள்ளார்.

அதேவேளை நாளை அமைச்சர் சுசில் பிறேமஜயந்த வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## முதலமைச்சரின் வினைத்திறன் மீது ஆளும்கட்சி உறுப்பினருக்கு சந்தேகம்

### மாகாண அமர்வில் சாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு முதல்வரின் மந்தமான செயற்பாடு குறித்து மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் கஜதீபன் கடுமையாக சாடியுள்ளார்.

நேற்றைய மாகாணசபை அமர்வில் அவர் உரைநிகழ்த்தும் போது,

நீங்கள் எழுதியுள்ள தீர்ப்புக்கள் எல்லாம் சரியென நாங்கள் சொல்லமுடியாது. உங்களுக்கே தெரியும் நீங்கள் கூட சிலவேளை கவலை அடைந்திருக்கக்கூடும். நீங்கள் ஒரு தீர்ப்பை எழுதுங்கள். அது சரியா, பிழையா என பிறகு பார்ப்போம். ஒரு முடிவு எடுங்கள். அது கட்சி ரீதியான பிரச்சினைகள் வரும் என்றில்லை.

இதை எல்லாவற்றையும் தாண்டித்தான் நாம் இருக்கிறோம். இது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது என வடமாகாண முதலமைச்சரை சாடினார் கஜதீபன்.

நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க



# முதியோர் இல்லத்தில் ஒளிவிழா

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு ஒளிவிழா கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சென்.தோமஸ் தேவாலயத்தைச் சேர்ந்த சுமார் 150 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்கள் பல கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

இல்லத்தின் திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்களும், பல்வேறு கலை நிகழ்வுகளை செய்வதற்கு தயாராகியுள்ளனர்.

கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (137)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | PROGRAM NAME |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | I.T.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# முன்னுதாரணமான சிறுவர்கள்; அம்பிகைநகரில் மரங்கள் நாட்டல்



வேலணை அம்பிகைநகர் பிரதேசத்தில் சிறுவர்களால் மரங்கள் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அம்பிகைநகர் சிறுவர்கள் இணைந்து தமது பிரதேசத்தின் முக்கிய இடங்களில் மரங்களை நாட்டும் நிகழ்வை ஆரம்பித்தனர். அதன் முதற்கட்டமாக அம்பிகைநகர் கடற்கரையினை அண்டிய பிரதேசத்தில் அதிக மண்ணரிப்பு ஏற்படும் இடங்களினை அடையாளம் கண்டு பரீட்சார்த்த முயற்சியாக இம்மரநாட்டு நிகழ்வினை ஆரம்பித்துள்ளார்கள்.

தொடர்ந்து மரங்களை ஏனைய பொது இடங்களில் நாட்டவுள்ளதாக அச்சிறுவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களது நடவடிக்கைக்கு அக்கிராமத்தினைச் சேர்ந்த அனைத்து பெரியவர்கள் ஆதரவினை வழங்கியுள்ளார்கள். (21)

# விபத்தில் காயமடைந்த பொலிஸார் உயிரிழப்பு

கிளிநொச்சி கரடிப்போக்குப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தி யோகத்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த ஆர்.வி.புஸ்பரட்ண என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.இவரது சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற மரண விசாரணை மற்றும் சடல பரிசோதனையை அடுத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ்மோட்டார் சைக்கிளில் பயணித்த போது இவர் விபத்தில் சிக்கி படு காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (பா) (25)

# யாழ்.மாநகரசபை பகுதியில் டெங்கு நுளம்பு கட்டுப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய்க் காவியான நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை யாழ்.மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார பிரிவின் யாழ்.மாநகர சபையின் நடமாடும் ஒலிபெருக்கி வாகனம் மூலமாக யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மழை நீர் தேங்கவல்ல இடங்களை துப்புரவு செய்வதுடன், நீர் தேங்காவண்ணம் சுத்தம் செய்வதுடன், குடியிருப்புக்களுக்கு அருகாமையில் காணப்படும் குப்பை, பற்றை என்பவற்றை சுத்தம் செய்து புதைக்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு சுத்தம் செய்யாது காணப்படும் பகுதிகள் குறித்து சுகாதாரப் பகுதியினருக்கு அறியத்தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (பா)

## போட்டியில் சாதனை

வலி.தெற்கு பிரதேச சபையும், கலாசாரப் பேரவையும் இணைந்து கலாசார விழாவை முன்னிட்டு நடத்திய திறந்த போட்டியில் மயிலணி சுன்னாகத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணிய ஐயர் பாலச்சந்திரசர்மா தமிழ் சிறுகதையில் 1ஆம் இடத்தினையும், தமிழ் பாடலாக்கத்தில் 2 ஆம் இடத்தினையும், ஆங்கில சிறுகதையில் 2 ஆம் இடத்தினையும், ஆங்கில பாடலாக்கத்தில் 1 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளார்.

2012 ஆம் ஆண்டு பிரதேச மட்டத்தில் 10 பரிசில்களைப் பெற்ற இவர் இதுவரை பிரதேச மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் 40 இற்கும் மேற்பட்ட பரிசில்களைப் பெற்றுள்ளமையும் அரசினால் கலைஞர் அட்டை வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக்

ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3930)


# இந்திய மீனவர்கள் பிணையில் விடுதலை

101 கிலோவும், 850 கிராமும் நிறையுடைய கஞ்சாப் பொதியினை இலங்கைக்குள் கடத்தியதாக இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 02.05.2013 இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் இவர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது இவர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்தியாவின் தேக்குவடி, பாம்பன், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மூன்று நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் மீதான பிணை மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. மனு மீது விசாரணையை மேற்கொண்ட நீதிபதி மூவரையும் பிணையில் செல்வதற்கு நேற்று அனுமதியளித்தார்.

மூவரும் தலா 2 இலட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையிலும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். பிணையாளிகளில் ஒருவர் இலங்கையை வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் அவர்களின் முகவரியை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

அத்துடன் பிணையாளிகள் குறித்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் விளக்கத் தவணைகளுக்கு நீதிமன்றில் சமுகமளிப்பார்கள் என்பதை உறுதிப்படுத்தும் சத்தியக் கூற்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரன் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டவாதி கே.எம்.முகைமீன் ஆஜரானார். (137)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2590 திகதி 17-12-2014

ஆங்கில எழுத்து: Z

வெற்றி எண்கள்: 17 29 36 52 | போனஸ் இல: 47

ஜக்பொட் பரிசு ரூ.23,332,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 217150 | 20/- | 4,343,000/- |
| 2 இல | 15406 | 100/- | 1,540,600/- |
| 3 இல | 315 | 1,000/- | 315,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8747 | 40/- | 349,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 606 | 1,000/- | 606,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 23,332,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 10372 | 100/- | 1,037,200/- |
| 2 இல + போனஸ் இல | 490 | 500/- | 245,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்தும் + போனஸ் இல | 409 | 200/- | 81,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்தும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்தும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 253532 | | 10,200,980/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 23,925,325/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3919)

# விலைக்கேற்ற அளவில் தேநீர் வழங்கப்படுவதில்லை

## குற்றம் சாட்டுகின்றனர் வாடிக்கையாளர்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் நகரப் பகுதியில் இயங்கிவரும் உணவகங்களில் பால்தேநீர் மற்றும் தேநீர் உணவு என்பவற்றை உண்ணச் செல்லும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தேநீர் கோப்பைகளின் அளவு மிகவும் சிறிதாக காணப்படுவதாகவும் தேநீர், மற்றும் பால் தேநீர் என்பவற்றின் விலைகள் மிகவும் உயர்வாக காணப்படுவதாகவும் வாடிக்கையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சுன்னாகம் நகர் பகுதியில் பெரும்பாலான கடைகளில் சில்வர் கோப்பைகளிலே தேநீர் பரிமாறப்படுவதாகவும் இச் சில்வர் மிகவும் சிறிய அளவுகளில் உள்ளதால் அவற்றில் வழங்கப்படும் தேநீர் மிகவும் குறைவாக காணப்படுவதுடன் தாகம் தீர்க்க செல்வோர் மீண்டும் தாகத்துடன் திரும்பிச் செல்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து பொதுமக்கள் நலனில் அக்கறை செலுத்துவார்களா? என பாதிக்கப்படும் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (66)

# புகையிலை செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை, இணுவில், உரும்பிராய் பகுதி தோட்டங்களில் புகையிலைக் கன்றுகளை விவசாயிகள் நாட்டிவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த சில வருடங்களாக குறித்த பிரதேசங்களில் புகையிலைச் செடிகளின் விளைச்சல் குறைந்திருந்ததால் அதனை நாட்டுவதற்கு அப்பகுதி விவசாயிகள் குறைவாகவே ஆர்வம் காட்டிவந்தனர்.

ஆனால் தற்போது ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் இம்முறை அப்பகுதி விவசாயிகள் தற்போதய போகத்திற்கு புகையிலைச் செடிகள் நடுவதில் ஆர்வம் காட்டிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த புகையிலைச் செய்கையால் தமக்கு பெருமளவில் இலாபம் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.(66)

# இலக்கிய விமர்சன ஆற்றல் மாணவர்களுக்கான செயலமர்வு



கோப்பாய் பிரதேச செயலகம், மாணவர்களின் இலக்கிய விமர்சன ஆற்றலை மேம்படுத்தும் நோக்கோடு செயலமர்வு ஒன்றை அண்மையில் ஒழுங்கு செய்து நடாத்தியது.

இந்நிகழ்வில் வளவாளர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் பிரேமினி சபாரத்தினம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் ஏ.அனுசாந்தன், ஆசிரியை பிறேமா தங்கரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (48)

# பாலர் பகல் பராமரிப்பு நிலையம் தரமானதாக அமைய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் என்ன தராதரத்துடன் அமைய வேண்டுமென்ற திட்ட வரைபைச் செய்யும் செயலமர்வு ஒன்று அண்மையில் கிளிநொச்சி மகாதேவா சிறுவர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிறுவர் நன்நடத்தை திணைக்கள நிதி அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள், சிறுவர் நன்நடத்தை அலுவலர்கள், முன்பிள்ளை பராய அபிவிருத்தி அலுவலர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (90)

# மீண்டும் கிடைக்குமா? வைப்பிலிட்ட பணம்

வடவரணி தம்பான் பகுதியில் கடந்த காலத்தில் தற்காப்பு வளர்ச்சிக் கழகம் ஒன்றை உருவாக்கி பல அங்கத்தவர்களை இணைத்து திறன்பட நடாத்தி வந்த வேளை நாட்டில் ஏற்பட்ட யுத்த காரணத்தால் கழகம் செயற்படாமல் போனது. இக்கழகத்தில் பலர் நம்பிக்கையின் அடிப்படையில் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். சிலர் கடனடிப்படையில் கடனாக பணமும் பெற்றுள்ளனர். தற்போது யுத்தம் ஓய்ந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இக் கழகச் செயற்பாடுகள் முடங்கிய நிலையில் இக்கழகத்தில் பணத்தை நம்பி வைப்பிலிட்ட பயனாளிகள் அப்பணத்தை மீளப்பெற முடியாத சூழலில் இருப்பதைக் காணமுடிகிறது. எனவே இனியாவது இக்கழக நிர்வாகத்தில இருந்தவர்கள் அப்பாவி மக்களின் நலன்கருதி அவர்களின் ப்ணத்தை திருப்பக் கொடுக்க முன்வரவேண்டுமென பணத்தை வைப்பில் இட்ட ஒருவர் கருத்து தெரிவித்தார். (150)

# அபிவிருத்தி பற்றிய கேள்விகளைத் தவிர்ப்பதற்கு தமிழரசுக்கட்சியின் தந்திரம்-- ஊடகங்களில் சண்டைச் செய்தியை வரப்பண்ணுவது






எதிர்பார்த்த மாதிரியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற முகமூடியைப் போட்டுக் கொண்டிருக்கிற தமிழரசுக் கட்சி 16.12.2014 யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வைத்த பொறியும் ஒப்பேறியிருக்கு.

தமிழரசுக் கட்சியின் தலையிடிகளில் ஒன்றாகிய சிவாஜிலிங்கம் தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்து இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கி பிரச்சினையை உருவாக்கும் விதத்தில் நிறுத்தாமல் ஒலிவாங்கியில் பேசியவாறு சென்று கொண்டிருந்தார்.

இதை அவதானித்த அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் என்பவர் சிவாஜிலிங்கத்திடமிருந்து ஒலிவாங்கியை வாங்கி நிலைமையை அமைதிப்படுத்த முனைந்தார்.

அப்பொழுது தமிழரசுக் கட்சியின் தரப்பிலிருந்து சயந்தன், விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், சிறிதரன் எம்.பி ஆகியோர் ராஜ்குமாரைத் தாக்கி தள்ளிவீழ்த்தினர். இதனையடுத்து களேபரம் தொடங்கியது.

அங்கே நடந்த விவாதங்கள் பொருத்தமற்றவையாக இருந்தாலும் அவை கைகலப்பாக மாறியிருக்கத் தேவையில்லை.

இருப்பிடத்தை விட்டு எழுந்து வந்து கூட்டத்தைக் குழப்பும் வகையில் யாரும் நடந்திருக்கத் தேவையில்லை.

ஏனென்றால், இது மாவட்ட அபிவிருத்தி சம்பந்தப்பட்ட நிர்வாகக் கூட்டம்.

பாராளுமன்றமோ, மாகாண சபையோ, பிரதேச சபை, நகரசபை மன்றுகளோ அல்ல. இந்த மாதிரி சபைகளிலும் மன்றுகளிலும் இந்த அரசியல்வாதிகள் நடந்து கொள்கிற முறைகளைப் பற்றி மக்கள் நன்றாக அறிவார்கள். அதைப்பற்றி நமக்கு அதிகம் பொருட்டும் அல்ல.

ஆனால், இது மக்களுடைய தேவைகளோடு இணைந்த நிர்வாக நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்டது.

எதிர்த் தரப்பை மோதலுக்குத் தூண்டி, அந்த மோதலில் தான் பாதிக்கப்பட்டதாக ஒப்பாரி வைத்து, அந்த ஒப்பாரி மூலமாக அனுதாபத்தைத் தேடி அரசியல் ஆதாயத்தைத் தேடியுள்ளது தமிழரசுக் கட்சி.

இந்த மாதிரியான விளையாட்டில் தமிழரசுக் கட்சி பெரிய கில்லாடி. அதற்கு நிகர் அதுவேதான்.

முன்னர் இந்த மாதிரி வேலையை அது அரசாங்கத்தோடு அல்லது அதன் படைகளோடு விளையாடியது.

பச்சை இனவாதம் தெறிக்க – எதிர்த்தரப்பை உணர்ச்சி வசப்படுத்தி, அவர்கள் நிதானமிழக்கும் வகையில் தமிழரசுக் கட்சி ஆட்கள் மேடைகளில் பேசுவார்கள். பாராளுமன்றத்தில் முழங்குவார்கள். பத்திரிகைகளில் எழுதுவார்கள். ஊர்களில் கதைப்பார்கள்.

இதற்காக அவர்கள் பொதுப்பண்பாட்டையோ சபை நாகரீகத்தையோ, அரசியல் நாகரீகத்தையோ கூடப் பொருப்படுத்த மாட்டார்கள்.

இப்படி மிகவும் கீழ்த்தரமாக நடந்து எதிர்த்தரப்பை வன்முறைக்குத் தூண்டிவிட்டு தான் நல்லபிள்ளை வேடம் போடுவது தமிழரசுக் கட்சியின் பரம்பரைக் குணமாகும்.

இந்த மாதிரியான விளையாட்டின் மூலம் எதிர்த்தரப்பை அது குற்றவாளிக்கூண்டில் நிறுத்தி விடுகிறது. அப்படி நிறுத்தியே அது இவ்வளவு காலமும் இனவாத அரசியலைச் செய்து வந்திருக்கிறது.

இதனால் தமிழரசுக் கட்சிக்கு கொள்ளை இலாம். ஆனால் மக்களுக்கோ பெரும் நட்டம். எதையும் குழப்புவதே இவர்களுடைய ஒரே நோக்கம்.

இப்பொழுது மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தையும் குழப்பிவிட்டார்கள்.

ஏற்கனவே இவர்க்ள் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் கலந்து கொள்ள மாட்டோம் என்று அடம்பிடித்து வந்தார்கள். ஆனாலும் அவர்களால் அப்படி இருக்க முடியவில்லை. ஏனென்றால் இந்த அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் மக்களுடைய வாழ்வோடு நேரடியாக சம்பந்தப்பட்டவை என்பதால் இவற்றில் கலந்துகொள்வதைத் தவிர்க்க முடியவில்லை. ஆனாலும் இவர்களுடைய உள்மனதில் இந்தக் கூட்டங்களை எப்படியும் குழப்பியே தீருவது என்ற எண்ணமே இருந்தது.

கடந்த சில வாரங்களுக்கு முதல் கிளிநொச்சியில் நடந்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் இப்படித்தான் சிறீதரன் எம்.பி குழப்பங்களை ஏற்படுத்தினார். சனங்களைப் பற்றியோ, சனங்களுடைய வாழ்க்கையைப் பற்றியோ இவர்களுக்கு துளியளவு அக்கறையும் கிடையாது.

அதனால் இப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள். இதை தமிழ் மக்கள் புரிந்து கொள்வதில்லை. எதிர்த்தரப்பினரின் தலைகளிலே எல்லாக் குற்றச்சாட்டுகளையும் சுமத்தி விடுவார்கள். மக்களும் இதை பகுத்துப்பார்த்து உணர்ந்துகொள்வதில்லை. முன்னர் அரசாங்கத்தையும், படைத்தரப்பினரையும் எதிராகக் காட்டி அரசியல் நடத்தியவர்கள் இப்பொழுது ஈ.பி.டி.பியைக் காட்டி அரசியல் செய்கிறார்கள்.

அரசையும், படையினரையும் தொடர்ந்து எதிர்த்தால் ஆபத்து என்றும் ஈ.பி.டி.பியை எதிர்ப்பதே இப்போதைக்கு இலாபம் என்றும் திட்டமிட்டிருக்கிறது தமிழரசுக் கட்சி.

தமிழரசுக் கட்சியின் வலையில் சிக்கியதா ஈ.பி.டி.பியும்?

நல்ல முடிவுகள், அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது. - பில் கேட்ஸ்

தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தலைமைத்துவச் சறுக்கல்!

கடந்த 16 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அடிதடியில் முடிந்த பிறகு, கூட்டத்தின் இணைத் தலைமைகளில் ஒருவரான வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை, அவரது தலைமைப்பண்பு குறித்த பல சந்தேகங்களை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

கூட்டம் குழம்பியதற்கு முழுப்பொறுப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் அவர் வெளியில் இருந்து கூட்டத்திற்கு கொண்டு வந்த அக்கூட்டத்திற்குச் சிறிதேனும் சம்பந்தம் இல்லாத வெளியாட்களையுமே சாரும் என்று கூறிவிட்டு அவர் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டவர்களே வரமுடியும் என்பது அந்தக் கூட்டத்தின் இணைத் தலைவரான அவருக்கு நன்கு தெரியும். கலந்துகொள்ள வேண்டியோருக்கு அழைப்பிதழ்களை அனுப்புபவர் யாழ். அரசாங்க அதிபர்.

கூட்டத்திற்குச் சம்பந்தமில்லாதவர்கள் அல்லது அழைப்பிதழ் அனுப்பப்படாத யாராவது வந்திருந்தார்களா என்பதை அரச அதிபரிடம் கேட்டு முதலமைச்சர் அறிந்துகொள்ள முடியும். அப்படி அறிந்து அவர்கள் யார் யாரென்று வெளிப்படுத்தாமல், தமிழரசுக் கட்சியின் பரம்பரை வழமையான எழுந்தமானத்துக்கு அவதூறு வீசுதலையே அவரும் செய்கிறார்.

அப்படி அழைப்பிதழ் இல்லாதவர்களும் கூட்டத்தில் இருந்திருந்தால் இணைத்தலைவர் அதை முதலிலேயே ஆட்சேபித்திருக்க முடியும்.

சிவாஜிலிங்கத்திடம் தன்மையாக மைக்கைத் தரச்சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தவரை சிறிதரன் எம்.பியும் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனும் மாகாணசபை உறுப்பினர் கஜதீபனும் தாக்கி வீழ்த்தியதை கண்ணுக்கு முன்னால் பார்த்துக்கொண்டிருந்தும் தடுத்து ஒரு வார்த்தையும் பேசாத கூட்ட இணைத்தலைவரகளுள் ஒருவரான முதலமைச்சர், கூட்டத்திற்குச் சம்பந்தமில்லாது வந்திருந்தவர்கள்தான் தாக்கியதாக எந்த சாட்சியத்தை வைத்து நீதி வழங்குகிறார்?

தனது கட்சிக்காரர்கள் அநாகரிகக் கூச்சல் போடும்போதும், கூட்ட நடைமுறைகளை மதியாது எழுந்து கத்தி அமளிதுமளிப் படும்போதும், தலைமையுரையையும் நிகழ்த்தவிடாது சண்டித்தனம் செய்து ஆடும்போதும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார் அல்லது எழுந்து வெளியேறிவிடுகிறார். இதுவா தலைமைத்துவம்?

உங்கள் கட்சிக்காரர்களின் கூச்சலையும் அடாவடியையும் இணைத்தலைமை ஆசனத்திலிருக்கும் ஒருவரான நீங்கள் தடுத்து நிறுத்தும்போதுதானே மற்றைய இணைத்தலைமைக்கும் தனது தரப்பை தடுத்து நிறுத்தி கூட்டத்தை அமைதிக்குக் கொண்டுவர முடியும்.

சண்டையையும் கூச்சலையும் காணவும் கேட்கவும் சகிக்காதவர் போன்ற கனவான் வேடமணிந்துகொண்டு வெளியேறும் நீங்கள், வெளியே வந்த பிறகாவது கூட்டத்தைக் குழப்பியவர்களைப் பாரபட்சமின்றி அல்லவா கண்டிக்க வேண்டும்.

அடாவடி செய்தவர்களை நேரிலும் பின்னர் வீடியோக் காட்சிகளிலும் பார்த்திருக்கக் கூடிய நீங்கள், மர்மநபர்களே கூட்டத்தைக் குழப்பினார்கள் என்று நேர்மைக்குப் புறம்பாக அறிக்கையிடுவது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கவா அல்லது மக்களைத் திசைதிருப்பி ஏமாற்றவா?

அமைச்சர் தனது இணைத்தலைமை உரையில் அரசியல் பேசினார் அதனால்தான் எனது கட்சிக்காரர்கள் குழம்பினார்கள் என்று அதே அறிக்கையிலேயே தமிழரசுக்கட்சிக்காரர்கள் குழம்பியதை ஒத்துக்கொள்ளும் நீங்கள்... இதற்கு முன் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நீங்கள் ஆற்றிய இணைத்தலைமையுரைகள் என்ன கம்பராமாயண விளக்கங்களா?

இதற்கு முந்திய கூட்டங்களில் நீங்கள் தெரிவித்த கருத்துகளுக்கு பதில் கூறுவது எனது கடமை என்றுதானே அமைச்சர் டக்ளஸ் தனது உரையை ஆரம்பித்தார்! ஆனால் அவரது அந்த பதில் கருத்துக்களைச் சகிக்க முடியாத பண்பைத்தானே கடைசியில் நீங்களும் காட்டிக்கொண்டுவிட்டீர்கள்! - ஆசிரியர்

# தேசிய அடையாள அட்டைக்கு 75 ஆயிரம் பேர் விண்ணப்பம்

## விநியோகப்பணிகள் துரிதம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு, அடுத்த வாரமளவில் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் சேவைகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர் கள் ஊடாக, தேசிய அடை யாள அட்டைக்காக சுமார் 75 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கான அடையாள அட்டைகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருவதுடன், அடுத்த வாரமளவில் இந்த வ்ண்ணப்பங்களுக்கான அனைத்து அடையாள அட்டைகளையும் விநியோகிக்க முடியும் என நம்புவதாகவும் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

15 ஆம் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு முயற்சித்து வருவதாகவும், உரிய நேரத்தில் விநியோகிக்க முடியாத பட்சத்தில் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் எவ்வித குறைபாடுகளும் இல்லாத பட்சத்தில் அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமான அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியும் என்றார்.

# இலங்கை - பின்லாந்து முதலீட்டு வருவாய் ஒப்பந்தம்

இலங்கைக்கும் பின்லாந்துக்கும் இடையிலான முதலீட்டு வருவாய் ஒப்பந்தங்கள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று பின்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் பொருளாதார நல்லுறவு தர செயலாளர் மற்றி அனற்றோனன் தலைமையிலும், இலங்கைக்கான பின்லாந்தின் தூதுவர் ரவுலி சுயிக்கனன் பங்குபற்றுதலிலும் இடம்பெற்றது.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி லக்ஸ்மன் ஜயவீர, மற்றும் முதலீட்டுச் சபையின் பல சிரேஷ்ட அதிகாரிகள் அலுவலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உரையாடலின் போது கருத்துத் தெரிவித்த பின்லாந்து பிரதிநிதிகள், இலங்கையின் வர்த்தக முதலீட்டு கொள்கைகளில் தாம் மிகுந்த ஈடுபாட்டுடன் இருப்பதாகவும், இலங்கை இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கொண்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தமானது நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்த முறையில் வழிகாட்டக் கூடியதொன்றாகுமென தெரிவித்துள்ளனர்.

இதற்கு கருத்துத் தெரிவித்த முதலீட்டுச் சபை பிரதிநிதிகள் இலங்கையிலுள்ள முக்கிய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும், சீனாவுடன் கொண்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றியும் எடுத்துரைத்துள்ளனர். அத்துடன் அண்மையில் ஜப்பானின் இரண்டு வங்கிகளான டோக்கியோ மிற்சுயிபி மற்றும் மிஷ்கோ வங்கிகளுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு வர்த்தக ஒப்பந்தங்கள் பற்றியும் வைப்புக்கள் குறித்த விளக்கத்தினையும் வழங்கினர். இதற்கு கருத்துத் தெரிவித்த பின்லாந்து பிரதிநிதிகள், சுற்றுலாத்துறையில் இலங்கையின் வர்த்தக நிறுவனங்களுக்கு எமது நாட்டில் தகுந்த வாய்ப்புக்கள் வழங்கப்படுமென தெரிவித்துள்ளனர். அத்துடன் அதே சுற்றுலாத் துறையில் இலங்கையில் தாம் முதலீடுகளை மேற்கொள்ள மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பின்லாந்தின் மிகப்பெரிய சுற்றுலாத்துறை வர்த்தக கண்காட்சியின் போதும் இலங்கையின் மிகப்பெரிய பங்குபற்றுதல் உண்டு எனத் தெரிவித்துள்ளனர். பின்லாந்தில் அதிகளவிலான பல்வேறு துறை ரீதியான பொருளாதார வளங்கள் கடல் கடந்த சார்ந்த இடங்களில் இடம்பெற்று வருகிறது.

அத்துடன் பின்லாந்தில் பொருளாதாரத்துறையில் சிறந்து விளங்கும் 15 - 20 வரையான உலக தரம் வாய்ந்த கம்பனிகள், அத்துடன் அங்கு நிலவி வரும் பொறியியல் துறை மிகவும் பலம் வாய்ந்ததாகும் எனவும் கலந்துரையாடலின் போது இரு தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

# மகிந்தவின் வெற்றியின் பங்குதாரர்களாக முஸ்லிம் சமூகம் மாறவேண்டும்

## பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நலனிற்கு உதவக்கூடிய வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடையப்போகும் வெற்றியில் பங்குதாரர்களாக முஸ்லிம் சமூகம் மாற முடியுமென பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் முகமாக காத்தான்குடி பிரதேசத்திலுள்ள உலமாக்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் ஹஸ்புல்லாஹ்வுக்குமிடையிலான விஷேட சந்திப்பொன்று காத்தான்குடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

காத்தான்குடியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மட்டக்களப்பு தொகுதி தேர்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், உலமாக்கள், கதீப்மார்கள் மற்றும், காத்தான்குடி நகர சபைத் தவிசாளர எஸ்.எம்.அஸ்பர், பிரதித் தவிசாளர் எம்.ஜெஸீம், காத் தான்குடி நகர சபை உறுப்பினர்களான பாக்கீர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பரீட் உட்பட கட்சி ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வேட்பாளரின் முன்னைய கருத்துக்களை அனுமதியின்றி வெளியிட முடியாது

## தேர்தல்கள் ஆணையாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

வேட்பாளரின் அனுமதியின்றி அவரது முன்னைய கருத்துக்களை, மற்றைய வேட்பாளரின் பிரசாரத்துக்கு விளம்பரமாகப் பயன்படுத்த வேண்டாம் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் அரசியல்வாதி ஒருவரினால் வேறு ஒரு அபேட்சகர் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் மற்ற வேட்பாளரின் பிரசாரத்துக்காகவோ, விளம்பரத்துக்காகவோ பயன்படுத்துவதாயின் தொடர்புபட்ட அரசியல்வாதியின் அனுமதியுடனேயே அது இடம்பெற வேண்டும் என்றார்.

தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்த போது அமைச்சராக இருந்து பேசிய கருத்துக்களில் சிலவற்றை தெரிவு செய்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரசாரத்துக்கு விளம்பரமாக பயன்படுத்து வதனை நிறுத்துமாறு பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதனையடுத்து இந்த அறிவிப்பை ஆணையாளர் ஊடகங்களுக்கு விடுத்துள்ளார்.

# 13ஆவது திருத்தச் சட்டமானது நாம் இரந்து கேட்ட பிச்சை அல்ல



**16.12.2014 யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரை!**

## (இதைக் கேட்டுவிட்டுத்தான் கூட்டமைப்பினர் கோபம் கொண்டு அடிதடியில் இறங்கினர்)

நல்லதோர் வீணைசெய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?...

என்று, மகாகவி பாரதியார் பாடிய பாடலைத்தான் நான் இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஏனென்றால் இன்று வட மாகாண சபையின் நிலையும் அப்படித்தான் இருக்கிறது.

நான் யாரையும் குறை கூறுகின்றேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

முரண்பாடுகளை வளர்ப்பதற்கு நான் நினைத்திருக்கவில்லை. வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் வகையில் எமது மக்களின் நலன் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதே எனது நோக்கமாகும்.

ஆயினும் இணைத்தலைவர் தொடர்ந்தும் ஒருசில கருத்துக்களை வலியுறுத்தி வருவதால் அதற்கு பதில் கூறுவது எனது கடமையாகும் என நினைக்கின்றேன்.

எனது கருத்துக்கள் யாவும் தவறான மனநிலையில் இருப்பவர்களைத் திருத்துவதற்காகவே.

அரசியலில் முரண்பாடுகள் இருப்பதே ஜனநாயகம். ஆனாலும், அந்த முரண்பாடுகள் மக்களின் நலன்களில் இருந்து உருவாக வேண்டும்.

இன்று வட மாகாண சபையின் ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்கள் வடமாகாண சபையை புழுதியில் எறிந்திருக்கிறார்கள் என்பதையே நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து, அதற்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்று அதிலிருந்து முன்னோக்கிச் செல்வதே எமது அரசியல் இலக்கு. இதுவே நடைமுறைச் சாத்தியமான வழிமுறையும்.

இதையே நான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலம் தொடக்கம் வலியுறுத்தியும், வாதாடியும் வந்திருக்கிறேன்.

ஆனாலும், 13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரைகுறைத் தீர்வு என்றும், ஒன்றுக்கும் உதவாத தீர்வு என்றும், உழுத்துப்போன தீர்வு என்றும், நாறிய பிணம் என்றும், அதை தும்புத் தடியால் கூட தொட்டும் பார்க்க மாட்டோம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்தே வந்திருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்களின் அழுத்தங்கள், அவர்கள் கொண்டிருக்கும் வழமையான அரசியல் தீர்விற்கு எதிரான நிலைப்பாடு என்று ஒருபுறமும்,

அந்த அழுத்தங்களை எதிர்கொண்டு, அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்த துணிச்சல் இல்லாத கடந்தகால ஆட்சித் தலைமைகள் என்று மறுபுறமும்...

எமது மக்களை அரசியல் தீர்வின்றி அவலங்களோடும், அழிவுகளோடும் நடுத்தெருவில் நிற்க வைத்தது.

எமக்குக் கிடைத்திருந்த அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் தீர்வு முயற்சிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் தட்டிக் கழித்து வந்ததன் விளைவினால், எமது மக்கள் அழிவுகளைச் சந்தித்து வந்திருக்கிறார்கள்.

சம்பந்தன் அவர்கள் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டில், கடந்த காலங்களில் கிடைத்த அரிய வாய்ப்புக்களைத் தாங்கள் தட்டிக் கழித்து தவறு செய்து விட்டதாகவும், உணர்ச்சியூட்டும் அரசியலால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இயலாது என்றும் கூறியிருந்தார்.

ஆகவேதான் எமது மக்களின் அழிவுகளுக்குக் காரணமானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ற உண்மையை நான் இன்றுவரை உரக்கவே சொல்லி வருகின்றேன்.

இத்தனை அழிவுகளுக்குப் பின்னராவது எமது நடைமுறைச் சாத்தியமான வழிமுறையை ஏற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வந்ததை நான் வரவேற்றிருந்தேன்.

முன்னர் தாமே இழித்துரைத்து தூற்றித் திரிந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்பதற்கு ஒப்பாக, மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போட்டியிட முன் வந்தபோது பட்டமரத்தில் இருந்து பால் வடிகிறதே என்று நான் ஆச்சரியப்பட்டிருக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போட்டியிட முன்வந்தது தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்காக அல்ல என்பதும் இப்போது வெளிச்சமாகிவிட்டது.

மாகாண சபை அதிகாரம் எமது கைகளில் கிடைத்து விட்டால் அது சரியான திசைவழி நோக்கி சென்றுவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அச்சமடைகிறார்கள் என்ற உண்மையும் இப்போது வெளிப்பட்டுவிட்டது.

ஆகவே, மாகாண அதிகாரத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டால், அதைத் தாமே முடக்கி வைத்திருப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதாலேயே அவர்கள் தேர்தலில் போட்டியிட வந்திருந்தார்கள் என்பதும் இப்போது அம்பலப்பட்டு விட்டது.

13ஆவது திருத்தச் சட்டமானது "மயிலே மயிலே இறகுபோடு" என்று நாம் இரந்து கேட்ட பிச்சை அல்ல.

அல்லது கொழும்பு கறுவாக் காட்டில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எமக்கு எடுத்துத் தந்ததும் அல்ல.

இது எங்கள் அனைவரினதும் நீதியான ஆரம்பகால உரிமைப் போராட்டத்தின் பயனாக எமக்குக் கிடைத்த வரம்.

எமது ஆரம்பகால நீதியான உரிமைப் போராட்டத்தின் வலியும், வதையும் அதில் பங்கெடுத்து உணர்ந்து கொண்டவர்களுக்கே 13ஆவது திருத்தச் சட்டத்தின் பெறுமதி என்னவென்று தெரியும்.

எங்கள் கண்ணீராலும், குருதியாலும் பெற்றோம் சர்வேசா இப்பயிரை கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ.

ஆகவேதான் அந்த வலிகளைப் புரிந்து கொண்டவன் என்றவகையில் கிடைத்திருக்கும் வட மாகாண சபை அதிகாரத்தைச் சரிவரப் பயன்படுத்த வருமாறு நான் அழைப்பு விடுக்கிறேன்.

சமுத்திரத்தில் நின்றுகொண்டு அங்கு மீன்கள் இல்லை என்று யாரும் கூற வேண்டாம்.

வெண்ணெய்யை கையில் வைத்துக் கொண்டு நெய் தேடி யாரும் அலைய வேண்டாம்.

முத்துக்கு முன்பாக நின்று கொண்டு வெறும் சேறுதான் உள்ளதென்று யாரும் கூற வேண்டாம்.

இன்று வட மாகாண சபை என்பது பன்றிக்கு முன்பாக வீசப்பட்ட முத்தாகவே இருக்கிறது.

இந்த வருடம் வட மாகாண சபைக்கு 20,539 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட மொத்த நிதி.

இதில், 14,580 மில்லியன் ரூபா வட மாகாண சபையின் மீள்வரும் செலவீன நிதியாக ஒதுக்கப்பட்டு, அதன் மூலம் வட மாகாண சபையின் நிர்வாக அதிகாரிகள் உரியபடி தமது மாதாந்த சம்பளங்களைப் பெற்று வருகின்றனர்.

இதைவிடவும், வட மாகாண சபையின் கீழ் வாழும் எமது மக்களின் அபிவிருத்தி, மற்றும் எமது தேசத்தைத் தூக்கிநிறுத்தும் பணிகளுக்காக 5,959 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதில் 42 சதவீதம் மட்டுமே இதுவரை வட மாகாண சபையினால் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், அவர்களின் தலைமையிலான வடமாகாண சபையின் ஆட்சியாளர்களினதும் பொறுப்பற்ற செயலால் வட மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருந்தொகையான நிதி அரசாங்கத்தின் திறைசேரிக்குத் திரும்பிச் செல்கிறது.

வட மாகாண சபை அதிகாரம் என்பது எமது கைகளில் கிடைத்திருந்தால் ஒரு சதம் கூட நாம் திரும்பிச் செல்ல விட்டிருக்க மாட்டோம். மாறாக இன்னும் மேலதிக நிதி வளங்களைப் பெற்று எமது மக்களில் வாழ்வியல் உரிமைகளை மேலும் ஈடேற்றியிருப்போம்.

திட்டங்களைக் கொடுத்து நிதி வளங்களைப் பயன்படுத்த நீங்கள் திட்டமிட்டே மறுத்துக்கொண்டு அடுத்தவன் தடை என்று திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் இருக்கும் உறவு இன்னமும் சரியாக ஒழுங்கு படுத்தப்படவில்லை என்று இணைத்தலைவர் விக்னேஸ்வரன் கூறுகின்றார்.

அது உண்மை என்றால் யார் அதற்குப் பொறுப்பு?...

வந்த நிதியைத் திரும்பிச் செல்ல வைக்கின்ற வட மாகாண சபை அதற்குப் பொறுப்பா?...

அல்லது, ஏனைய மாகாணங்களை விடவும் 2014, 2015 இற்கான நிதி ஒதுக்கீட்டில் அதி கூடிய நிதியை வட மாகாண சபைக்கே ஒதுக்கி கொடுத்த அரசாங்கம் அதற்குப் பொறுப்பா?...

இந்த விடயம் குறித்து நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பகிரங்க விவாதத்திற்கு அழைத்திருந்தோம்.

எமது மக்களின் முன்பாக நீங்களும் வந்து உங்கள் கருத்தைக் கூறுங்கள், நாமும் எங்கள் கருத்தைக் கூறுகின்றோம். எது உண்மை என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்.

ஆனாலும், தம்மிடம் உண்மை இல்லை என்பதால் எமது பகிரங்க விவாதத்தை ஏற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்து வருகிறது.

உங்களது சொகுசு வாகனங்களை நீங்கள் பெறுவதற்கு மட்டும் அரசாங்கத்துடன் உடன்பாடு எட்டியிருக்கிறீர்கள்.

உங்களது ஆடம்பர மாளிகைகளுக்கு மாதாந்தம் இலட்சக் கணக்கில் வாடகைப் பணம் பெறுவதற்கு அரசாங்கத்துடன் உடன்பாடு உருவாகியிருக்கிறது.

எமது மக்களுக்காகக் கிடைத்த நிதியை மட்டும் திறைசேரிக்குத் திரும்பிச் செல்லாமல் பாதுகாக்க உங்களுக்கு அரசாங்கத்துடன் உடன்பாடு உருவாகவில்லை என்றால் அதை யார்தான் நம்பப்போகிறார்கள்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை நிறைவேற்றுவதே உங்கள் கடமை என்று கூறுகின்றீர்கள்.


**(18ஆம் பக்கம் பார்க்க)**

**மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி கூறி வருகிறீர்கள். நான் உங்களைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக இதைக் கூறவில்லை. உங்களுக்கு ஒருபோதும் சம்பந்தமில்லாத, நீங்கள் சிறுதுளி வியர்வை கூட சிந்தியிருக்காத போலியான தமிழ்த் தேசியத்தை உச்சரித்து பொய்யுரைத்துத்தான் நீங்கள் வெற்றி பெற்றீர்கள்.**

**நாங்கள் போலித் தமிழ்த் தேசியம் பேசாமல், பொய் பேசாமல் நேர்மையான தமிழ்த் தேசிய உணர்வுகளை எங்கள் செயலில் காட்டிப் பல்லாயிரம் மக்களின் வாக்குகளைப் பெற்று மாகாண சபையில் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம்.**

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானாலும் நாட்டை விட்டு வெளியேற மாட்டோம்

## தேர்தல் கூட்டத்தில் நாமல் ராஜபக்ஷ உறுதி



(கொழும்பு)

நாம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானாலும் ஒரு போதும் நாட்டை விட்டு வெளியேற மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற. உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ, தேர்தல் பிரசார கூட்டங்கள் சிலவற்றில் நேற்று முன்தினம் கலந்துகொண்டார்.

கொலன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,.

எதிர்வரும் 8ஆம் திகதி மைத்திரியின் ஆட்சி, நல்லாட்சியை ஏற்படுத்தும் என கூறுகின்றனர். 8ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை மூடப் போகின்றார்களாம்.

ஒவ்வொரு வரையும் வெளிநாடு செல்வதற்கு இடமளிக்க மாட்டார்களாம். அவர்களுக்குத் தேவையான நபர்கள் மாத்திரமே செல்ல அனுமதிக்கப் படுமாம். எந்தவொரு நபரும் செல்வதற்கு அனுமதி வழங்கப் பட மாட்டாது என கூறுகின்றனர். அதுவா நல்லாட்சி பரவாயில்லை. எமது தந்தை மத்தள விமான நிலையத்தை நிர்மாணித்தார். ஏனையோரும் செல்ல முடியும். அதனை மறந்துள்ளனர். மத்தளவை மறந்து விட்டனர். எனினும், யார் செல்கின்றார்கள் என தெரியவில்லை.

நாம் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானாலும், நாட்டை விட்டுச் செல்லமாட்டோம் என்றார்.

# பயங்கரவாதத்திற்கு வழங்கும் உறுதியான பதிலாக தேர்தல் அமையும்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

**பிரிவினை வாதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் நாட்டு மக்கள் வழங்கும் உறுதியான பதிலாக இம்முறை தேர்தல் அமையும். பாணந்துறையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.**



இப்பிரசாரக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளி நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயல்வோரிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க எதிர்வரும் 8ஆம் திகதி வெற்றிலைக்கு மக்கள் வாக்களித்து முழுமையான ஆதரவினை வழங்குவது முக்கியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து நாம் இல்லாதொழித்தாலும் வெளிநாடுகளில் பயங்கரவாதம் தொடர்கிறது. பயங்கரவாதிகள் சர்வதேசத்திலிருந்து இயங்கி வருகின்றனர். தனியான நாடாளுமன்றத்தை அமைத்துக் கொண்டு அதற்கு அமைச்சரவையையும் நியமித்து செயற்பட்டு வருகின்றனர். இது தொடர்பில் நாம் அவதானமாக செயற்பட வேண்டும்.

நாட்டிற்கு எதிராகச் செயற்பட்டு அரசாங்கத்தை ஸ்திரமற்றதாக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. எதிர்காலத் திலும் நாம் மிக அவதானமாக செயற்பட வேண்டியுள்ளது. நாட் டின் எதிர்காலத்தை தீர்மானிக் கும் நாள் எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதியாகும்.

அன்றைய தினம் மக்கள் காலையிலேயே வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். வெற்றிலைக்கு வாக்களித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்.ஒன்பதாம் திகதி நாம் அனைவரும் இணைந்து பாற்சோறு சாப்பிடுவோம். நாம் பாற்சோறு உண்ண இப்போதிருந்தே தயாராவோம்.

நாட்டை பயங்கரவாதத் திடமிருந்து மீட்டு அபிவிருத்தியில் கட்டியெழுப்பி யுள்ளோம். நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு நாம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு மக்களின் பூரண ஆதரவு அவசியம்.

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை தொடர்ந்து எதிர்காலத்திலும் முன்னெடுப்பதே எமது திட்டமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# டிசம்பர் 28 ஆம் திகதி வாக்காளர் அட்டை விநியோக தினம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விசேட தினமாக எதிர்வரும் 28 ஆம் திகதியை பிரகடனப்படுத்தியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 வாக்குச் சீட்டுகளை எதிர்வரும் 20ஆம் திகதி தபாலில் சேர்க்கவுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ.அமரதாச தெரிவித்துள்ளார் .

மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக வாக்காளர் அட்டைகள் தபாலில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் தபால் திணைக்களத்தினால் 25 மாவட்டங்களிலும் எதிர்வரும் 28ஆம் திகதி வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வாக்காளர் அட்டை விநியோகம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

குறிப்பாக இந்த திகதியின் பின்னர் தபால் திணைக்களத்தினால் வீடுவீடாக வாக்காளர் அட்டை விநியோகம் முன்னெடுக கப்படமாட்டாது என்றார்.

# கொழும்பில் சௌகரிய பயணம் 200 சொகுசு பஸ்கள் இறக்குமதி



(கொழும்பு)

கொழும்பை அடையும் பிரதான ஆறு வீதிகளிலிருந்து அதிசொகுசு பஸ் சேவையை ஆரம்பிக்க இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

இதற்காக 200 புதிய பஸ்களை இறக்குமதி செய்ய உள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் உப தலைவர் எல்.ஏ.விமலரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக கொழும்பு நகரில் ஏற்படும் வாகன நெரிசலை குறைத்துக் கொள்ள முடியும்

அத்துடன் கொழும்புக்கு வரும் அரச ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு சௌகரியமான பயணத்தை ஏற்படுத்திக்கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# புதிய அரசாங்கத்தில் அமைச்சர்கள் எண்ணிக்கை 30

## மைத்திரிபால திட்டம்



(கொழும்பு)

புதிய அரசாங்கம் மக்களின் பசியை போக்குவதற்கே முன்னுரிமை வழங்கும் நாம் உருவாக்கும் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் அமைச்சர்கள் முப்பதை விட அதிகரிக்கப்பட மாட்டாது. என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

மாவனெல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் இன்று எந்தளவு வீழ்ச்சியடைந்துள்ளன எனின், நான் அறிந்த வகையில் இந்த நாட்டின் தேர்தல் வரலாற்றில் இவ்வளவு தேர்தல் சட்டங்களை மீறும், தலைவர் மற்றும் ஆளுங்கட்சி இந்த நாட்டில் இருக்கவில்லை. இன்று இராணுவத்தை பொலிஸாரை தவறான முறையில் பயன்படுத்துகின்றனர். இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் இன்று உணவிற்கு கூட வழியில்லாதவர்களாக காணப படுகின்றனர்.

நாம் உருவாக்கும் புதிய அரசாங்கத்தில் நாட்டில் துன்பப் படும் மக்களின் பசிக்கான தீர்வே முதலாவதாக பெற்றுக்கொடுக் கப்படும் என நான் தெளிவாக கூறிக் கொள்கின்றேன். அரசாங் கத்தில் பல அமைச்சர்கள் இருக கின்றனர்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சராக செயற்படுவதற்கு வெட்கப்படுவதாக நான் கூறினேன். 63 அமைச்சரவை அமைச்சர்களும், 57 பிரதி அமைச்சர்களும் இந்த நாட்டின் வேறொரு அரசாங்கத்தில் இருக்கவில்லை என்பதை நான் தெளிவாக கூறிக்கொள்கின்றேன்.

# புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்கிறார் கம்மன்பில

ஜாதிக ஹெல உறுமய உள்ளூராட்சி உறுப்பினர்கள் 28 பேரில் 17 பேர் தம்முடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்துடன், இந்த 17 பேருடன் மேலும் சில ஹெல உறுமய அதிருப்தியாளர்களை உள்வாங்கி, ஜனவரி 8ஆம் திகதிக்குப் பிறகு தாம் புதிய அரசியல் கட்சியொன்றை ஸ்தா பிக்கவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இதேநேரம், ஜாதிக ஹெல உறுமய ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க, உதய கம்மன்பில பணம், பதவி மற்றும் வரப்பிரசாதங்களுக்கு விலை போயுள்ளதாக நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் குற்றம் சாட்டியுள்ளார்.





**தாய்மாரின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்று மகரகமை இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துக்கொண்ட தாய்மாருக்கு முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ பரிசில்களையும் வழங்கினார். சமூக பாதுகாப்புச்சபையின் நிறைவேற்றுப்பணிப்பாளரும் பிரபல திரைப்பட இயக்குநருமான சஞ்சய லீலாரத்ன இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.**

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சாவகச்சேரி பிராந்திய சபையின் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சபையின் செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதால் நிர் வாக உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சத்சங்கம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆன்மீக அறிவுரைகளை சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் வழங்கவுள்ளார்.

# நவாலி தெற்கில் கள்ளுத் தவறணை அசௌகரியங்களை எதிர்நோக்கும் மக்கள்

(நவாலி)

நவாலி தெற்குப் பகுதியில் இயங்கும் கள்ளு விற்பனை நிலையத்தால் அதனை அண்டியுள்ள பகுதியில் குடியிருப்போர் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, மாலை வேளைகளில் இக்கள்ளுத் தவறணைக்கு அதிகளவான வாடிக்கையாளர்கள் வருவதாகத் தெரிவிக்கும் மக்கள் இவர்கள் மது போதையில் அப்பகுதியால் செல்வோரிடம் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பாவிப்பதாகவும் இதனால் அப்பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பகுதியால் செல்லும் யுவதிகள் மற்றும் பெண்கள் தமது பிரயாணங்களை மேற கொள்வதற்கு அஞ்சி வருவதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் மாணவர்கள் பலர் தனியார் கல்வி நிலையங்கள் முடிவுற்று வீடு திரும்புவதற்கு தமது பெற்றோரை தம்முடன் கூடவரும்படி வற்புறுத்து கின்றனர். இதனால் தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் பலர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

எனவே, இந்த கள்ளுத் தவறணையை அதிகளவு மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கு மாற்றியமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

## நலனோன்பு புத்தகம்

வட வரணிப் பிரசேத்தில் வசிக்கும் மாற்று ஆற்றலுடையவர்களுக்கான நலனோன்பு புத்தகம் கிராம அலுவரால் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் சமூக சேவைகள் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து மாற்று ஆற்றல் உடையவர்களின் விபரங்கள், புகைப்படங்களுடன் சேகரித்து செல்லப்பட்டு அவர்களுடைய நோய்த் தன்மை, பாதிக்கப்பட்ட விபரம், ஆண்டு என்பன குறிப்பட்டு தற்போது மாற்று ஆற்றலுடையவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. (150)

# மோ. சைக்கிள் வழங்குவது குறித்து உள்ளூராட்சி மட்டத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உதவியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவது குறித்து வடக்கு மாகாண உள்ளூராட்சி மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர், வருமான பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட நிலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு (உள்ளூராட்சி) வழங்கப்படாத நிலையிலிருந்தது.

இந்நிலை குறித்து பல தரப்பாலும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்தே வடக்கு உள்ளூராட்சி மட்டத்தில் பணியாற்றும் அபிவிருத்தி சார்ந்த அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (92)

# வடமேற்கு பிரதேச மக்களுக்கு சமுர்த்தி முத்திரை வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மற்றும் பலாலி பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி பிரதேச செயலர் பிரிவில் அமைந்த அல்வாய் வடமேற்கு ஜே/397 கிராம சேவகர் பிரிவில் வாழ்ந்துவரும் மக்களுக்கான சமுர்த்தி முத்திரை வழங்குவது தொடர்பான முன்னாய்வு கலந்துரையாடல் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் அல்வாய் வடமேற்கில் அமைந்த பலாலி கடற்றொழிலாளர் அமைப்பு மண்டபத்தில் வாழ்வின் எழுச்சித் திட்ட முகாமையாளர் சிறீதரன் ஸ்ரீகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இப்பிரதேச வாழ்வின் எழுச்சித் திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சசிகலா சிவகரன் மற்றும் வாழ்வின எழுச்சி தலைமை அலுவலக உத்தியோகத்தர் குணசேகரம் சுதாகரன், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கரையோர அமைப்பாளர் இரட்ணகுமார், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சி தலைவி கைலாஜினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுவரையில் இம்மக்களுக்கான முத்திரைக்கொடுப்பனவு வழங்கப்படாதிருந்த நிலையில் கடந்த 12ஆம் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவை இக் கிராம மக்கள் சந்தித்திருந்தனர். அதற்கமைவாக அமைச்சரின் பணிப்புரைக்கமைய இம்முத்திரை வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (40)

# ஒளி விழா சிறப்பு



(ஒலுமடு)

ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழா கடந்த செவ்வாய்க் கிழமை பாடசாலை முதல்வர் ரி.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வினபோது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பாடல்கள், பேச்சு, நடனம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வுக்கு மதகுருமார்கள், ஆசிரியர்கள், நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி, நெடுங்கேணி பிரதேச சபை தவிசாளர், இராணுவ பொறுப்பதிகாரி ஆகியோரும் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# "நிலவு நீரிலும் தெரியும்" சிறுகதைத் தொகுதி வெளியீடு

முருகேசு ரவீந்திரனின் "நிலவு நீரிலும் தெரியும்" (சிறுகதைத் தொகுப்பு) அனைத்தும் (படைப்பிலக்கியம் பற்றிய பார்வை) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு வைக்கப்படவுள்ளன.

நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விரிவுரையாளரும். சுன்னாகம் வாழ்வகத்தின் தலைவருமான ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் வழங்குவார்.வாழ்த்துரைகளை எழுத்தாளரும் உள சமூக சீராளனுமான ஜோசப் பாலா, யாழ் இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா ஆகியோர் வழங்குவர்.

"நிலவு நீரிலும் தெரியும்" (சிறுகதைத் தொகுப்பு) நூலின் வெளியீட்டு உரையினை உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் ப.சுதானந்தராஜா வழங்க நூலின் முதற்பிரதியை லயன்.ஆர்.பேரின்பநாயகம் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்வார்.அனைத்தும் (படைப்பிலக்கியம் பற்றிய பார்வை) நூலின் வெளியீட்டுரையினை ஆசிரியர் கீதா கணேஷ் வழங்க நூலின் முதற்பிரதியினை மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்வார். நயப்புரைகளை வைத்திய கலாநிதி ம.கணேஷன், யாழ் இலக்கிய குவியத்தின் தலைவர் வேலணையூர் தாஸ் ஆகியோர் வழங்குவர் (48,18)

# மன்னாருக்கு நாமல் ராஜபக்ஷ விஜயம்



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மன்னார் ஆயரை சந்தித்து நேற்று முன்தினம் கலந்துரையாடியுள்ளார். மன்னாரிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையினை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை இடையே இடம்பெற்றிருக்கும் சந்திப்பு தொடர்பில் எத்தகவலும் இதுவரையில் வெளியாகவில்லை. ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மரியாதையின் நிமிர்த்தம் மன்னார் ஆயரை சந்தித்து ஆசீர் பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(19.12.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 04 ஆம் திகதி.
துவாதசி/சித்தம்
விசாக நட்சத்திரம் மு.இ.9/47 வரை பின் அனுசம
இராகு காலம 10.53 - 12.23 வரை. சுபநேரம 06.23 - 07.53 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — பிள்ளைகளின் செயல்களை பவ்வியமான முறையில் திருத்துவது நன்று.

**ரிஷபம்** — நீண்ட நாட்களாக மனதை வருத்திய விடயம் நல்ல முடிவினைத் தரும்.

**மிதுனம்** — வெளியூர் உறவினர் மனைக்கு வருவதனால் மகிழ்வேர்படல்

**கடகம்** — உங்களை நாடிவரும் துயர் சமயோசித புத்தியினால் விலகிவிடல்.

**சிம்மம்** — கொள்கைப் பிழப்பின்றி இருக்கும் மகனைப் பற்றி கவலை கொள்ளல்.

**மீனம்** — கௌரவக் குறைபாடு சிலருக்கு ஏற்பலாம்.

**கன்னி** — அவசரபுத்தியும் முன்கோபமும் அன்பின் பலனைக் கெடுத்துவிடும்.

**கும்பம்** — போக்குவரத்தின்போது வாகன விபத்து ஏற்படலாம்.


**மகரம்** — அரசியல் பற்றிய விமர்சனம் நண பனை எதிரியாக்கிவிடும்.

**தனுசு** — மற்றவரின் குறையான செயற்பாட்டால் உங்களின் அமைதி கெட நேரிடும்.

**விருச்சிகம்** — உங்களின் ஆலோசனைகளை நண்பர்கள் செவிமடுக்க நேரும்.

**துலாம்** — சொத்துப் பங்கீடு நல்ல முடிவுக்கு வருதல்

# இரண்டாம் நாள் ஆட்டம் அவுஸ்ரேலியா 221 ஓட்டங்கள்



இரண்டாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலியா 221 ஓட்டங்களை எடுத்துள்ளது. அஸ்வின்

இந்திய அவுஸ்ரேலிய அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இப்போட்டிக்கான இந்திய அணியில் சாகா, கரன் சர்மா, சமி ஆகியோருக்கு பதிலாக தோனி, அஸ்வின் மற்றும் உமேஷ் யாதவ் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

முதல் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர இறுதியில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களை எடுத்திருந்தது. நேற்று மீண்டும் ஆட்டம் தொடங்கிய போது மேலும் 97 ஓட்டங்கள் சேர்த்து 408 ஓட்டங்களுக்கு இந்திய அணி ஆட்டமிழந்தது.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸ்சை தொடங்கியது அவுஸ்ரேலிய அணி. தொடக்க ஆட்டக்காரர்களாக ரோஜர்சும், வோர்னரும் களமிறங்கினர். அதிரடியாக ஆடி ஓட்டங்கள் குவிப்பில் ஈடுபட்ட வோர்னரை 29 ஓட்டங்களில் வெளியேற்றினார் உமேஷ் யாதவ். அதன் பின்னர் வாட்சன் ரோஜர்சுடன் ஜோடி சேர்ந்தார். அவரும் அதிரடி ஆட்டத்தையே கடைப்பிடித்தார். தன் பங்குக்கு 25 ஓட்டங்கள் குவித்து வாட்சன் ஆட்டமிழந்தார்.

இதனால் கப்டன் ஸ்மித் களமிறங்கி ரோஜர்சுடன் இணைந்தார். ஸ்மித் களமிறங்கிய சிறிது நேரத்தில் அரைச்சதம் கடந்த ரோஜர்ஸ் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் ஷான் மாரஷ் களமிறங்கினார். அவரும் ஸ்மித்தும் இணைந்து பொறுப்புடன் விளையாடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டே வந்தனர். இந்த நிலையில் 32 ஓட்டங்கள் எடுத்திருந்த மாரஷ் ஆட்டமிழந்தார்.

அடுத்து மிட்சல் மாரஷ் கப்டன் ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் பொறுமையாக ஆடி வந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதையடுத்து இரண்டாவது நாள் ஆட்டம் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. அப்போது அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கப்டன் ஸ்மித் 65ஓட்டங்கள் மிட்சல் மாரஷ் 7 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

# பாகிஸ்தான் அணிக்கு கடும் எதிர்ப்பு



பாகிஸ்தான் பெஷாவர் தாக்குதலில் 132 மாணவர்கள் கொல்லப்பட்ட நிலையிலும், நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்றதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள இராணுவ பாடசாலையில் புகுந்த தீவிரவாதிகள் அங்கிருந்த மாணவர்களை கொன்று குவித்தனர். இதில் 132 மாணவர்கள் உட்பட மொத் தம் 145 பேர் கொல்லப்பட்டனர்.

இதனால், நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் இடையிலான நான்காவது ஒருநாள் போட்டியை (அபுதாபி) ஒத்திவைக்கவேண்டும் என, கிரிக்கெட் வீரர்கள் உட்பட பல தரப்பிலும் இருந்து கோரிக்கை எழுந்தது.

சமீபத்தில் அவுஸ்ரேலிய வீரர் ஹியுஸ் பந்து தாக்கி மரணம் அடைந்த மறுநாள், இந்த இரு அணிகள் மோதிய டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் இரத்து செய்யப்பட்டது.


இப்போது 132 மாணவர்கள் பலியான நிலையிலும், அபுதாபியில் நேற்று போட்டி வழக்கம் போல நடந்தது. இதற்கு முன் இரு அணி வீரர்களும் இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியின் செய்தித் தொடர்பாளர் கருத்து வெளியிடுகையில், எங்களால் முடிந்தவரை நான்காவது ஒருநாள் போட்டியை ஒத்தி வைக்க முயற்சி செய்தோம். ஆனால் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஒப்பந்தம் காரணமாக போட்டியை நடாத்த வேண்டியதாயிற்று, என்றார்.

# தடையை நீக்க கோரிக்கை

இந்திய குத்துச்சண்டை வீராங்கனையான சரிதாதேவிக்கு விதிக்கப்பட்ட ஒரு வருட தடையை திரும்ப பெற வலியுறுத்தி சர்வதேச குத்துச்சண்டை சங்கத்திற்கு இந்த மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இந்தியானில் நடந்த ஆசிய விளை யாட்டு போட்டிகளில், குத்துச்சண்டை பிரிவில் இடம்பெற்ற சரிதா தேவி அரையிறுதி போட்டியில் கொரிய வீராங் கனையிடம் தோல்வியடைந்தார். சிறப்பாக செயற்பட்டபோதிலும் தோல் வியடைந்ததாக அறிவிக்கப்பட்டதால் விரக்தியடைந்த அவர் பரிசளிப்பு நிகழ்ச்சியின்போது அழுதுவிட்டார். தனக்கு வழங் கப்பட்ட வெண்கல பதக்கத்தை கொரிய வீராங்கனையின் கழுத்திலேயே போட்டு விட்டு சரிதா வெளியேறினார்.



சரிதாவின் இந்த நடவடிக்கை, சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் விதிமுறைகளுக்கு எதிரானது என்று கூறப்பட்டது. இது குறித்து விசாரித்த சர்வதேச குத்துச்சண்டை சங்கம் சரிதாவுக்கு கடுமையான தண்டனை அளிக்கப்படும் என்று கடந்த சில வாரங்களுக்கு முன் அறிவித்தது. அவரது தண்டனையை குறைக்கும் முயற்சியில் மத்திய விளையாட்டு அமைச்சகம் ஈடுபட்டது.

இந்நிலையில், சரிதாதேவி குத்துச்சண்டைப் போட்டிகளில் பங்கேற்க ஒரு வருடம் த்டை விதிப்பதாக சர்வதேச குத்துச்சண்டை சங்கம் நேற்று முன்தினம் அறிவித்தது. இந்த தடை உத்தரவை திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி சர்வதேச குத்துச்சண்டை சங்கத்திற்கு மத்திய அரசு கடிதம் எழுதியிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் சர்பானந்த சோனாவல் தெரிவித்தார்.



உலக டென்னிஸ் தொடரில் கோப்பை வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற வரலாற்றை சானியா படைத்துள்ளார். இவருடன் சிம்பாவேயின் காராபிளாக்கும் காணப்படுகின்றார்.

# ஓய்வு பெறுவது குறித்து தீர்மானிக்கவில்லை

ஒரு நாள் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து நான் இன்னமும் தீர்மானிக்கவில்லை என இலங்கை அணியின் ச்கலத்துறை வீரர் திலகரட்ன டில்சான் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 7ஆவதும் இறுதியுமான போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தொடரை 5-2 என கைப்பற்றியது. இந்தப் போட்டியில் 101 ஓட்டங்களை பெற்ற டில்சான் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டதோடு தொடர் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து ஊடகவியலாளர்களை சந்தித்த டில்சான் தனது ஓய்வு குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த தொடரில் நூறு ஓட்டங்களை பெற்றமை சிறப்பானதொன்றாகும். இந்த தொடரில் சகலதுறையிலும் சிறப்பாக செயற்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இளைய வீரர்கள் சிறப்பாக விளையாடுகின்றனர். இவர்களுடன் சேர்ந்து உலகக் கிண்ணத் தொடரை வெல்வது தொடர்பான சிந்தனைகளே உள்ளன.

மேலும் ஒரு நாள் அரங்கில் நான் ஓய்வு பெறுவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை. எனது உடல் நிலை நன்றாகவே உள்ளது.


எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடருக்கு பின்னர் எதுவரை என்னால் விளையாட முடியுமோ அதுவரை விளையாடுவேன். அதற்கு பின்னரே ஒரு நாள் அரங்கில் ஓய்வு பெறுவது குறித்த தீர்மானத்தை எடுப்பேன் என்றார்.



ஒரு நாள் அரங்கில் 300 போட்டிகளில் விளையாடியுள்ள டில்சான் துடுப்பாட்டத்தில் 18 சதங்கள் 41 அரைச் சதங்கள் அடங்கலாக 9004 ஓட்டங்களை கடந்துள்ளார்.

2012 பெப்ரவரி 28 ஆம் திகதி அவுஸ்ரேலியா ஹோபர்ட் மைதானத்தில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் ஆட்டமிழக்காது 160 ஓட்டங்களை பெற்றதே அவர் ஒருநாள் தொடரில் பெற்ற அதிகூடிய ஓட்ட பிரதியாகும்.

மேலும் பந்து வீச்சில் 300 போட்டிகளில் பங்குபற்றி 93 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளதோடு களத்தடுப்பில் 109 பிடியெடுப்புகளை எடுத்துள்ள்மையும் குறிப்பிடத்தக்கது.


வவுனியா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இடம்பெற்ற நோர்வே விஜேந்திரனின் 'பசுமை தேடும் பறவைகள்' நூல் மற்றும் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் தமிழ்மணி க.க.அருந்தவராஜா (மேழிக்குமரன்) நயவுரையாற்றுவதையும் இறுவட்டு ஒலிப்பதிவுசெய்யப்பட்ட, கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரியின் இயக்குநர் க.சௌந்தரராஜாவிற்கு வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த. சிவகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

## ஆன்மீக நிகழ்வு

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முருக நாம பஜனை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முருகன் அடியார்கள் ஒன்றிணைந்து பக்க வாத்தியங்கள் சகிதம் பஜனை நிகழ்த்தவுள்ளனர். (18)

## உள்ளூராட்சி வார விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் பிரதேச சபை தவிசாளர் பூ. சஞ்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், சிறப்பு விருந்தினர்களாக இந்திய பிரதித் துணைத் தூதுவர் எஸ். தட்சணாமூர்த்தி, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18)

# கரவெட்டி பிரதேச சபை கூட்டத்தில் சுகாதார நடவடிக்கை குறித்து ஆராய்வு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபையின் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் காரசாரமாக விவாதிக்கப்பட்டுள்ளன.

சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் சபைத் தவிசாளர் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் பல அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டதுடன் முக்கியமாக பல இடங்களில் குப்பைகள் சரியான முறையில் அகற்றப்படாமை குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனால் கூட்டத்தில் 15 நிமிடம் குழப்பம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர் பால்ராஜ், சரஸ்வதி வித்தியாலய வீதியில் உள்ள குப்பைகள் நீண்ட நாட்களாக



அகற்றப்படாமல் உள்ளன. இதற்குரிய நடவடிக்கையை சபை ஏன் எடுக்கவில்லை? என கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து இவ்விடயம் தொடர்பில் உப தவிசாளர் சாந்தரூபன், கரணவாய் தெற்கில் குப்பைகளை சபை ஏன் அகற்றுவதில்லை என கேள்வி எழுப்பினார்.

இதற்கு சுகாதார குழுக் கூட்டம் நடாத்தப்படாமையே காரணம் எனவும், இதனாலேயே இத தகைய முறைகேடுகள் இடம்பெறுவதாகவும், கூட்டம் நடாத்தப்பட வேண்டும் எனவும் சபை உறுப்பினர்களான குகதாஸும் பரஞ்சோதியும் தமது கருத்தை தெரிவித்தனர்.

எனினும் சபைக் கூட்டத்தில் பிரதேசங்களிலுள்ள குப்பைகளை அகற்றுவது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் சபைக்குட்பட்ட சந்தைப் பகுதி முன் இயங்கும் தேநீர் கடைகள் வெளிப் பகுதியில் இயங்க வேண்டும் என உறுப்பினர்களால் தீர்மானம் நிறை வேற்றப்பட்டதுடன் புதிய சந்தை இயங்கும் பொழுது தேநீர் கடைகள் அகற்றப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.(18)

## இந்து சமய பயிற்சி பாசறை

யாழ்ப்பாணம் இந்து ஸ்வய சேவக சங்கம், இந்து இளைஞர்களிடத்தில் இந்து சமயப் பண்புப் பயிற்சியினை வழங்கும் பொருட்டு இந்து சமயப் பண்புப் பயிற்சிப் பாசறை ஒன்றினை நடாத்தி வருவதாக இச்சங்கத்தின் யாழ். மாவட்ட இணைச் செயலாளர் ந. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார். இந்தப் பயிற்சிப் பாசறை தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பேராசிரியர் க. தேவராஜா தலைமையில் சிறப்புற நடைபெற்றிருந்தது. இதில் ஆசியுரையினை சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்களும், வாழ்த்துரைகளை அண்ணா தொழிலகத் தொழிலதிபர் பொ. நடராஜாவும் யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீ. ஜெகதீஸ்வரனும் வடபிராந்திய சத்தியசாயி நிறுவனத்தின் தலைவர் இ. சரவணபவனும் வழங்கியிருந்தனர். பிரதம விருந்தினராக மேற்படி பாடசாலையின் அதிபர் ந. தனபாலசிங்கம் கலந்து சிறப்பித்திருந்தார்.

இப்பயிற்சி 1 வாரம் வதிவிடப் பயிற்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 21ஆம் திகதி நிறைவு நாள் விழா நடைபெறவுள்ளது. இதில் பொதுமக்கள், பெற்றோர், விருந்தினர்கள் சபையில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் தங்கள் பயிற்சிகளைச் செய்து காண்பிக்கவுள்ளனர். (06)

# ஆடை வடிவமைத்தல் பெண்களுக்கான பயிற்சி நெறி

(கரைச்சி)

கரைச்சி பிரதேச செயலகத்தால் வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆடை வடிவமைத்தலுக்கும் கைவேலைக்குமான பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பெண்கள் மட்டும் பங்கேற்கவுள்ள இந்த பயிற்சி நெறிக்கான விண்ணப்பத்தினை தயாரித்து எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளதுவிண்ணப்பதாரி தரம் 9இற்கு மேல் கற்றிருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை கொண்டு வரல் வேண்டும்.

ஆறு மாதங்களைக் கொண்டதான இந்த பயிற்சி நெறி 2015 ஜனவரி முதலாம் திகதி கணேசபுரத்திலுள்ள பராசக்தி முன்பள்ளியில் நடைபெறவுள்ளது. பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் மாதாந்த ஊக்குவிப்பு பணம் வழங்கப்படவுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (90)

# தையல் பயிற்சி நிலையம் முள்ளிவாய்க்காலில் திறந்துவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரின் ஏற்பாட்டில் தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினத்தின் தலைமையில் அண்மையில் வைபவ ரீதியாக இப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் இக் கிராமத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 20 பயனாளிகளுக்கென இந்த தையல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் 1 நபருக்கு 2 லட்சம்



ரூபா பெறுமதியான தையல் இயந்திரமும் உபகரணங்களும் பயிற்சியின் இறுதியில் கைத்தொழில் வணிக அமைச்சர் றிசாட் பதியூதீனால் நிரந்தரமாக வழங்கப்படும்.

இதற்கு பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியின் றங்கதுரை, சுதந்திர கட்சி ஆதரவாளர்களும் முல்லைத்தீவு ஜனாதிபதி இணைப்பாளர் ஆகியோரும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (40)

# புள்ளி விபரத்திணைக்களத்தால் தகவல் திரட்டும் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 482 வணிக கைத்தொழில் சேவை நிறுவனங்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்திலுள்ள குடித்தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் இந்த தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத் தொகை மதிப்பீட்டுத் தேவைக்காக இந்த தகவல்கள் திரட்டப்பட்டன.

அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் இந்த தரவுகள் பிரதேச செயலர்களின் அனுசரணையுடன் திரட்டப்பட்டன.

நாடெங்கும் இந்த தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.நாட்டின் வணிக கைத்தொழில் சேவை துறைகள் எவ்விதம் செயற்றிறன் உடையதாக உள்ளன என்பதை அறிய காலத்திற்கு காலம் இந்த தகவல்கள் சேகரிக்கப்படுவது வழக்கமானதாகும்.

குடித்தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நாட்டின் தேவை கருதி பலவித தரவுகளை காலத்திற்குக் காலம் சேகரித்து வருகிறது. (90)

# சின்னச் சின்ன...




நம் தமிழ்த் திரைப்படங்களில் எல்லாம் கதாநாயகர்கள், 100 பேரை ஒரே நேரத்தில் பறந்து பறந்து அடிப்பர். கார்களை எல்லாம் ஒற்றைக் கையில் தூக்கி எறிவர். பாகிஸ்தானுக்கும் உலக வல்லரசுகளுக்கும் எதிராகப் போராடுவதில் சூரர்களான விஜயகாந்த் போன்றவர்கள் தம்மை நோக்கி வரும் தோட்டாக்களைக் கூடப் பற்களால் கடித்து நிறுத்திப் பின் துப்பிவிடுவதன் மூலம் எதிரியின் மார்பைத் துளைக்கச் செய்வர். மாடிகள் கோபுரங்களிலிருந்து கரணமடித்துக் கீழே வருவது முதல் தேவைப்பட்டால் திரும்பவும் கரணமடித்தபடி மேலே செல்லவும் செய்வர்.


இதற்கெல்லாம், பெரும்பாலும் டுப் நடிகர்களைத் தான் கதாநாயகர்கள் பயன்படுத்துவர். ஆனால், ஹொலிவுட்டின் பிரபல நடிகர் ரொம் குரூஸ், 5,000 அடி உயரத்துக்கு மேல் பறக்கும் விமானத்தின் வெளிப்புறத்தில் நின்றபடி, சண்டைக் காட்சியில் நடித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார். "மிஷன் இம்பொசிபிள் - 5" என்ற படத்துக்காக, பிரிட்டிஷ் ராணுவத்துக்கு சொந்தமான, "ஏ400 எம்" ரக விமானத்தின் இறக்கையின் கீழ் பகுதியில் நின்றபடி, அவர் சண்டையிட்டு நடித்த காட்சி, சமீபத்தில் படமாக்கப்பட்டது. படத்தின் இயக்குனர், தயாரிப்பாளர் எவ்வளவோ வற்புறுத்தியும், டுப் போடாமல், தானே இந்தக் காட்சியில் நடித்து அசத்தியுள்ளார், 52 வயதாகும் குரூஸ்!

70 ஆம் ஆண்டில் கால்பதிக்கிறது தமிழகத்தின் பிரபல சினிமா தயாரிப்பு நிறுவனமான ஏவி.எம்... முதலில் மும்பை போன்ற வெளி இடங்களில் படங்களைத் தயாரித்ததன் மூலம் படத் தயாரிப்பில் இறங்கினார் ஏவி.மெய்யப்ப செட்டியார். அதன்பிறகு சென்னையில் பிரகதி ஸ்டுடியோ என்ற பெயரில் ஸ்டுடியோ ஒன்றை உருவாக்கினார். பின்னர், 1945 ஆம் ஆண்டு




அக்ரோபர் 14 ஆம் திகதி ஏவி.எம். புரொடக்ஷன்ஸ் என்ற அவரது நிறுவனம் தொடங்கப்பட்டது. பெரிய அளவில் ஸ்டுடியோ தொடங்க சென்னை, வடபழனியில் இடம் வாங்கினார். ஆனால், அந்நேரம் அந்தப் பகுதியில் மின்சார தொடர்பு சாத்தியமில்லாததால், தனது சொந்த ஊரான காரைக்குடியில் படப்பிடிப்புத் தளங்களை ஏற்படுத்தினார். இதன் மூலம் தயாரான "நாம் இருவர்" 1947-ஆம் ஆண்டு வெளியானது. 48இல் "வேதாள உலகம்" வெளியானது. இதையடுத்து ஸ்டுடியோவை சென்னைக்கு மாற்றினார். 48 ஆம் ஆண்டு முதல் சென்னையில் செயல்பட்டு வரும் ஏவி.எம். ஸ்டுடியோ கால மாற்றத்துக்கு ஏற்ப தன்னையும் புதுப்பித்து கொண்டு, தற்போது 70ஆம் ஆண்டில் நான்காம் தலைமுறை கலைஞர்களோடு பயணத்தை தொடர்கிறது.

பிரபல நடிகர் ஒருவரால், சுதந்திரமாக வெளியே சுற்றுவது சிரமமான காரியம். ஆனால், சிலர் மட்டும் அதைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் தெருக்களில் சுற்றி வருவர். பொலிவுட் நடிகர், ஜோன் ஆப்ரகாம், "இமேஜ்" பற்றி கவலைப்படாமல், தெருக்களில் சாதாரணமாக சுற்றி வருபவர். மோட்டார் பைக் சவாரியை மிகவும் விரும்பும் இவர், மும்பை தெருக்களில் பைக்கிலேயே சுற்றி வருகிறவர். பைக் பிரியரான நடிகர் ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்தால், பைக் தயாரிப்பு நிறுவனங்கள் சும்மா இருக்குமா? இத்தாலி பைக் தயாரிப்பு நிறுவனம், தங்கள் தயாரிப்பான, "அப்ரிலியா ஆர்.எஸ்.வி.-4" என்ற பைக்கை, ஜோனுக்கு பரிசாக அளித்தது. 12



இலட்சம் இந்திய ரூபாய் மதிப்புள்ள இந்த சூப்பர் பைக்கில் தான், தெருக்களில் பாய்ந்து செல்கிறார் ஜோன் ஆப்ரகாம்.

களத்தூர் கண்ணம்மா படத்தில், குழந்தை நட்சத்திரமாக நடிக்கத் துவங்கிய கமல்ஹாசன், அரை நூற்றாண்டுக்கும் மேலாக, சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில், தான் கடந்து வந்த சினிமா பாதையை, "சிட்டிசன் கே" என்ற பெயரில், சுயசரிதையாக எழுதியுள்ளார். இதில், சினிமா சார்ந்த விஷயங்களை மட்டுமே எழுதியிருக்கும் கமல், தன் மனைவிகள் மற்றும் பிள்ளைகள் பற்றிய, எந்த விஷயத்தையும் எழுதவில்லையாம். அதே சமயம், தான் வளருவதற்கு காரணமான இயக்குனர்கள், தயாரிப்பாளர்களைப் பற்றி அதிகமாக எழுதியுள்ளாராம்.



KAMAL HAASAN

முன்னாள் உலக அழகியும் நடிகையுமான சுஷ்மிதா சென் அடிக்கடி



புதுப் புது அறிக்கைகள் விடுத்து, பொலிவுட்டை வியக்க வைத்து வருகிறார். "ஒருத்தருக்கு கழுத்து நீட்டி குடியும், குடித்தனமுமாக இருக்க விருப்பமில்லை..." என்று அறிக்கை விட்டு, முதலில் ஒரு குழந்தையை தத்து எடுத்தார். அந்தக் குழந்தைக்குத் துணை வேண்டும் என்று இரண்டாவது குழந்தையையும் தத்து எடுத்து செய்திகளில் இடம் பெற்றார். ஆனால் தற்போது, "அடுத்த குழந்தையை எப்ப தத்து எடுக்கப் போகிறீர்கள்?" என்று பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, "எனக்கு, 38 வயதாகிறது. இனியும் தாமதிக்காமல் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்..." என்று அவர் விடுத்துள்ள அறிக்கை, பொலிவுட்டில் அனைவரையும் கதிகலங்க வைத்திருக்கிறது.

தொடக்கத்தில் பல ஆண்டுகள் ஏ.ஆர்.ரகுமான் என்றுதான் தமிழில் எழுதப்பட்டது. பின்னர்தான் அது ஏ.ஆர். ரஹ்மான் ஆனது. "ரோஜா" படத்துக்கு முன்பு ஏ.எஸ். திலீப்குமார் என்ற பெயரில் அவர் மலேசியா வாசுதேவன் பாடிய "டிஸ்கோ டிஸ்கோ...", மால்குடி சுபா பாடிய "செட் மீ ..ப்ரீ..." எனும் இரண்டு தனிப்பாடல் தொகுதிகளை வெளியிட்டதுதான் ரஹ்மானின் சினிமா பிரவேசத்தின் முதல் அடி. "பஞ்சதன்" என பெயரிடப்பட்ட ரஹ்மானின் முதல் ஒலிப்பதிவகத்தை வடிவமைத்து, அவரது முதல் பாடலான "சின்னச் சின்ன ஆசை..." யின் ஒலியமைப்பில் அவரை வழி நடத்தியவர் ஒலிப்பதிவு மேதை எம்மி. 1984-88-ஆம் காலகட்டங்களில் வெளிவந்த இளையராஜாவின் பல பாடல்களில் நாம் கேட்ட சிறந்த ஒலி நேர்த்தியை உருவாக்கியவர் இவரே. பின்னர் எச்.ஸ்ரீதரின் ஒலி அமைப்பு வல்லமை ரஹ்மானின் இசைக்குப் பல வண்ணங்களைக் கொடுத்தது. ஒஸ்கார் விருது பெற்ற "ஸ்லம்டோக் மில்லியனர்" வரைக்கும் ஸ்ரீதரின் ஒலியமைப்புத் திறன் ரஹ்மானுக்கு உதவியது. ஒலியமைப்பாளர்கள் வேறு வேறாக இருந்த போதும் ரஹ்மானின் இசையொலி எப்போதுமே தனித்துவம் பெற்றிருந்தது வியப்புக்குரிய விஷயம்.



பழம்பெரும் நடிகர் கே.ஆர். ராமசாமிக்கு இது நூறாவது ஆண்டு. அவர் கடைசியாகப் பாடிய பாட்டு, "நான் பாடமாட்டேன் நான் பாடமாட்டேன்"



## பனிக்கால பாதுகாப்பு



• குளிரினால் உடல் சரியில்லாது போனாலோ அல்லது உடல்வலி இருந்தாலோ வெந்நீரில் எலுமிச்சைச்சாறு மற்றும் மிளகு கலந்து பருக வேண்டும். இச்செய்கை உடல் வலியைப் போக்கி செரிமானத்தைச் சீர்படுத்தும்.

• மூட்டு வலிக்கும் குளிர்ச்சிக்கும் ஆகவே ஆகாது. குளிர்ச்சி அதிகம் சேர்ந்தால் மூட்டுவலி அதிகரிக்கும். பனிக்காலத்தில் மூட்டுவலி உள்ளவர்கள், ஈரத்தரையில் வெறும் காலால் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்.

• வெளியே குளிர் அதிகமாக இருக்கும்போது நமக்கு அதிகம் தாகம் ஏற்படாது. அதனால் உதடுகள் காய்ந்து போவதில் நாம் அதிகம் கவனம் செலுத்தத் தவறிவிடுவோம். ஆனால் உடம்பின் நீர்நிலைபானது சில சமயங்களில் குளிர்க்காய்ச்சலுக்கு நம்மை இட்டுச் சென்றுவிடும். இதனைத் தவிர்க்க டம்ளரில் வெதுவெதுப்பான நீரினை நிரப்பி அதில் சீரகம் சிறிது கலந்து அருந்தி வரலாம்.

• குளிர் காலங்களில் சைக்கிள், ஸ்கூட்டர், பைக்கில் செல்லும்போது மார்பில் காற்று பலமாக தாக்கும். ஆகையால் ஒரு நியூஸ் பேப்பரை நான்காக மடித்து பனியனுக்குள் வைத்து பனியனை "இன்" செய்து சட்டைபோட்டுக் கொண்டால், மார்புக்கு பலமான பாதுகாப்பு கிடைக்கும். ஸ்வெட்டரை எடுத்துக் கொண்டு அலைய வேண்டாம்.

• பனிக்காலத்தில் இஞ்சி, லவங்கம், ஏலக்காய், கிராம்பு, மிளகு, மஞ்சள் போன்ற மசாலாப் பொருள்களை போதிய அளவில் உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இது குளிர்காலத்தில் உண்ணும் உணவினை எளிதில் செரிக்க உதவும். முளைகட்டிய உணவு வகைகளும், முள்ளங்கி, வெந்தயம் போன்றவையும் பனிகாலத்துக்கு பயனளிக்கும் உணவுவகைகள்தான்.

• பனிக்காலத்தில் பயணம் மேற்கொள்ளும்போது கழுத்துப் பகுதியையும் தலைப்பகுதியையும் மூடிவைத்து பயணிப்பது உடல்நலம் காக்க உதவும்.

• மற்ற காலங்களைவிட குளிர்காலத்தில் நமது உடலுக்கு அதிகம் தூக்கம் தேவைப்படுகிறது. இரவு உணவினை சீக்கிரமே முடித்துவிட்டு தூங்கச் செல்வதற்கு முன் மஞ்சள் தூள் கலந்த வெதுவெதுப்பான பாலை அருந்திவிட்டு தூங்குவது குளிர்காலத்தினால் தொண்டை மற்றும் நுரையீரல் பாதிப்பதை தடுக்கும்.

• பனிக்காலத்தில் குளிக்கும் போது நாசித் துவாரங்களில் சிறிது எண்ணெய் விட்டும் கைகால்களில் எண்ணெய் தடவி ஊறிய பின்பு குளிக்க வேண்டும். ஊட்டம் மிகுந்த இந்த எண்ணெய்க் குளியல் நமது நரம்புப் பகுதிகளையும், மூட்டுப்பகுதிகளையும் குளிர்தன்மை தாக்காமல் பாதுகாக்கும்.

# கின்னஸில் நீங்கள் இடம்பெற வேண்டுமா?

"கின்னஸ்" என்ற உலகப் புகழ்பெற்ற நிறுவனம் இந்த நூலை வெளியிடுவதால் இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகம்" என்று பெயர் பெற்றது.

இது முதன் முதல் 1955 ஆம் ஆண்டில் சேர். ஹியூபீவர் என்பவரால் வெளியிடப்பட்டது. அன்று முதல் இன்றுவரை இது தொடர்ந்து வெளி-வருவதுடன், விற்பனையிலும் உலக சாதனை படைத்து வருகிறது. இதுவரை 8 கோடி பிரதிகளுக்கும் அதிமான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. உலகில் ஐம்பது மொழிகளில் லண்டனிலிருந்து வெளிவருகிறது.

உலகப் புகழ்பெற்ற கின்னஸ் புத்தகத்தில் உங்கள் பெயர் இடம்பெற வேண்டுமானால் நீங்கள் செய்ய வேண்டியவை:

"நீங்கள் இதுவரை யாரும் செய்யாத ஒரு சாதனையைப் புரிய வேண்டும். அல்லது வேறொருவர் செய்த சாதனையை முறியடிக்க வேண்டும்".

இச்சாதனையை நிகழ்த்த வயது தடையல்ல, செய்யும் சாதனையே முக்கியம்.

நீங்கள் உங்கள் சாதனையை தக்க சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டும். கின்னஸ் நிறுவனத்தின் அனுமதியைப் பெற்ற பிறகே உங்கள் சாதனையைத் தொடங்க வேண்டும்.

நீங்கள் செய்யும் சாதனை வெளிவந்த செய்தித்தாள்கள், நிழற்படங்கள், வீடியோ காட்சிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முக்கிய நபர்களின் கையொப்பத்தோடு கூடிய சான்றிதழ் போன்ற அனைத்தையும் லண்டனிலுள்ள கின்னஸ் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.


நீங்கள் சாதனை செய்யும் போது ஏற்படுகின்ற லாப நஷ்டங்களுக்கோ, துன்பங்களுக்கோ, பொருள் இழப்பிற்கோ, உயிர் காப்பிற்கோ, விபத்திற்கோ கின்னஸ் நிறுவனம் பொறுப்பேற்காது. எல்லாவற்றிற்கும் நீங்களே பொறுப்பேற்க வேண்டும்.

நீங்கள் சாதலை புரியத் துணிந்து விட்டீர்களா?

**அப்படியென்றால் இதோ முகவரி:**

**Guinness editorial office,**
**33, london road, enfield,**
**Middlesex, E.No-26,**
**D.J. London, UK**


# 'எபோலா'வைக் கண்டுபிடிக்க...



உலகைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் எபோலா நோயைக் கண்டுபிடிக்க பயன்படுகிறது இந்த காகிதம். இதில் மரபணுக்கள் சங்கிலி இணைப்பாகப் பொதியப்பட்டுள்ளன. இந்தக் காகிதத்தை ஒருவரின் மீது வைத்தால், அவருடைய உடலில் உள்ள செல்களில் ஏற்படும் மாற்றத்தை உடனே கண்டறிந்து தெரிவித்துவிடும். எபோலா வைரஸால் பாதிப்பு இருக்கிறதா? என்பதைத் தெரிந்து கொள்ள இதைப் போன்ற மரபணு சங்கிலி இணைப்புகள் பொதியப்பட்ட 24 விதமான காகிதங்களைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த 24 காகிதங்கள் ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே எபோலா நோயால் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறதா? என்று சொல்லிவிடும். இந்த சோதனைக் காகிதம், நோய்களை மட்டும் அறிய பயன்படும் என்று நினைத்துவிடாதீர்கள். வீட்டில் உள்ள பழம் அழுகத் தொடங்கியிருக்கிறதா? வயலில் உள்ள மண் பூச்சிக்கொல்லி மருந்துகளால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது? என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள முடியுமாம்!

அமெரிக்காவின் மசாசூஸெட்ஸ் மாகாணத்தில் உள்ள பொஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதைக் கண்டுபிடித்துள்ளனர்.

# வலையில் கிடைத்தவை...




## கூட்டத்தைக் குழப்பி பெற்ற விழுப்புண்!

முதன் முதலாக போரில் விழுப்புண் அடைந்தார் ஐங்கரநேசன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வைத்து வாக்கு வாங்கி வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய வடக்கு மாகாணசபை விவசாய அமைச்சர் முதல் முதலாக கச்சேரியில் இடம் பெற்ற போரில் விழுப்புண் அடைந்துள்ளார். அதுவும் தண்ணீர்ப் போத்தலால் தாக்கியதாக விழுப்புண் அடைந்ததாகத் தெரியவருகின்றது. அதுவும் இவர் தமிழீழத்தை மீட்பதற்காகவோ அல்லது தமிழ்மக்களின் விடிவுக்காகவோ விழுப்புண் அடையவில்லை. தனது கட்சிக்காரர்களின் அடாவடியான நடவடிக்கைகளுக்குத் துணை போய் யாழ் மாவட்ட மக்களின் நன்மைக்காக நடாத்தப்பட்ட அபிவிருத்திக் கூட்டத்தை குழப்பும் நடவடிக்கைக்காகவே விழுப்புண் அடைந்துள்ளார். இவ்வாறான குப்பாடிக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்வரும் காலம் பொதுமக்கள் வாக்குகளால் பதில் சொல்வார்கள் என்பது வெளிப்படை. அத்துடன் ஊடகங்களுக்கு முன்னால் பொதுமக்கள் பார்ப்பதற்காக படம் காட்டும் இந்தக் குப்பாடிக் கூட்டமைப்பு வடக்கு மாகாணசபையின் எல்லையைத் தாண்டி ஏனைய மாகாண எல்லைக்குச் சென்றவுடன் நானும் நீயும் அண்ணணும் தம்பியும் என்ற தோரணையுடன் தென் பகுதி அரசசார்பு அரசியல்வாதிகளுடன் கொஞ்சிக் கூத்தாடுவது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

## அப்படி என்னதான் குழப்பம் இவர்களுக்கு?

தமிழர் தரப்போடு குறைந்தபட்சம் சுனாமி நிவாரண கட்டமைப்பையே செய்துகொள்ள மறுத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தலில்......

அவர் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டப் பொதியொன்றை முன்வைத்தபோது பாராளுமன்றத்தில் அதை தீயிட்டு கொளுத்திய ரணில் விக்கிரமசிங்கா.......

நோர்வே அனுசரணையுடனான போர்நிறுத்த காலத்தில் யாழ் உயர் பாதுகாப்பு வலயத்தில் ஒரு அங்குலத்தைத்தானும் பின் நகர்த்தத் தயாரில்லை என்று பலாலி பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களை அவமதித்து உரைத்து திருப்பியனுப்பிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா........

தமிழருக்கு குறைந்தபட்சம் 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வைக்கூட முன்வைக்கக்கூடாது என்று வலியுறுத்தி வந்த சம்பிக்க ரணவக்க....... ஆகியோருடைய ஆதரவில், தமிழர் பிரச்சினை தொடர்பாக தன்னுடைய அரசியல் வரலாற்றில் சாதகமான ஒரு வார்த்தைகூடப் பேசியறிந்திராத ஜனாதிபதி வேட்பாளரான மைத்மதிரபால சிறி சேனவை ஆதரிப்பதா இல்லையா என்பதில் தமிழர் தரப்புக்களுக்கு அப்படி என்னதான் குழப்பம் இருக்கிறது...?

**- ருஷாங்கன் வலைத்தளத்தில்**

## எதிர்ப்பரசியலை தொடர்வதை த.தே.கூ. கைவிட வேண்டும்

தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் ஆட்சியில் எவர் இருந்தாலும், அவருடன் பேசி பிரச்சினைகளை தீர்க்கவேண்டிய பொறுப்பில் இருக்கிறது. எனவே கூட்டமைப்பு எடுக்கும் எந்தவொரு முடிவும், எதிர்காலத்தில் ஆட்சியிலிருப்பவருடன் பேசுவதற்கு ஏற்றவாறான, சூழ்நிலையை உருவாக்குவதற்கு வழிசமைப்பதாக இருக்கவேண்டும். அவ்வாறில்லாது "எதிரி" என்னும் நிலையை பேணிக்கொண்டால், எதிரிகளுக்கான பதிலையே தமிழர்கள் பெற நேரிடும்.

ஏனெனில் ஆட்சிமாற்றத்திற்கான தேர்தல் என்பது வெளியில் ஜனநாயகம், நல்லாட்சி என்னும் சொற்களை துணைக்கழைத்து கொண்டாலும் கூட, குறிப்பிட்ட ஒருசிலரை அதிகாரத்திலிருந்து அகற்றி, இல்லாதொழிக்கும் நிகழ்சிநிரல் ஒன்றுடன் தொடர்புபட்டிருக்கிறது. இந்த இடம்தான் தமிழர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய இடமாகும்.

ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்கான ஆதரவை தமிழ் மக்கள் எப்போதும் வழங்கவேண்டியது அவசியம் என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை. ஆனால் தெற்கின் அதிகாரப் போட்டியில், தமிழர்கள் வெறும் பகடைக்காயாகிவிடக் கூடாது. இந்த அதிகார மோதலில் எவர் வெல்லுவார் என்பதை எவராலும் தற்போதைக்கு ஊகிக்க முடியாது. எதுவும் நிகழலாம்.

ஆனால் ஒருவேளை எதிரணியினரின் கணக்கு முன்னரைப்போல் பிழைத்துப் போய், மீண்டும் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால், தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவருடன் பேசக் கூடிய நிலையில் தமிழர்தரப்பு இருக்கவேண்டும். ஆனால் முன்னர் சரத் பொன்சேகாவை ஆதரித்து "எதிரி". மனப்பான்மை வளர்வதற்கு வழிவகுத்தது போன்று, இம்முறையும் முடிவு அமையுமானால், அதன் விளை-வையும் தமிழர்கள் அனுபவிக்கவே நேரிடும்.

**- யதீந்திரா**

## நீங்கள் நல்லவர்கள் உங்களால் முடியும்

இன்றைய காலகட்டத்தில் நடிகர்களின் கட் அவுட்களுக்கு பாலூற்றுவதும், நடிகைகளுக்கு சிலை வைப்பதுவும் இந்தியாவில் மாத்திரமல்ல. இன்றைய யாழ்ப்பாணத்திலும் இந் நிலைமைதான். ஒரு புறம், ஒருவேளை உணவின்றி அல்லற்படும் உயிர்கள் முகாம்களில் வாடிக் கொண்டிருக்க, மறு-புறம் இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து ரஜினிக்காக, அவர் பெயர் பொறித்த பெரிய கேக்குகளை வெட்டி அவரது பிறந்தநாளை அமோ-கமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் அவரது ஈழ ரசிகர்கள் சிலர்.

முறையான வழிகாட்டல் இல்லாமல், இன்றைய ஈழத்தில் வளர்ந்துவரும் வருங்காலத் தலைமுறை இப்படித்தான் இருக்கிறது. முன்பு கல்விமான்களும், கற்றறிந்தோரும், உழைப்பாளிகளும் மிகைத்திருந்த பூமி என இலங்கை முழுவதும் பிரசித்தம் பெற்றிருந்தது யாழ்ப்பாணம். இந்தியத் தமிழ் சினிமாக்களையொத்து இன்று வாள் வெட்டுக்களும், அடிதடியும், போதையும், விலைமாதுக்களும், பாலியல் வன்முறைகளும், கொள்ளையும், இந்திய நடிகர்களின் தீவிர ரசிகர்களும் என எல்லோரும், எல்லாமும் விரவிக் கிடக்கும் நிலமாக மாறியிருக்கிறது.

கண்மூடித்தனமாக, கோடிக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கும் நடிகர்களுக்காக, சொந்தப் பணத்தினை வாரியிறைத்துச் செலவழித்துக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கு சொல்ல விரும்புவது ஒன்றுதான். ஒழுங்கான பள்ளிக்கூடங்கள் இல்லாமல் அல்லற்படும் மாணவ மாணவிகளும், பென்சில் வாங்க வசதியின்றி படிப்பை நிறுத்திய சிறுவர் சிறுமிகளும், யுத்தத்தில் அங்கவீனமானவர்களும், ஆதரவிழந்தவர்களும், இருக்க இடமின்றி அவதிப்படுவோரும் இன்னும் உங்கள் ஊரில்தான் இருக்கிறார்கள். உங்கள் இஷ்ட நடிகருக்காக நீங்கள் செலவழிக்கும் இலட்சக்கணக்கான பணத்தை ஒன்று சேர்த்தாலே பெருமளவில் இவ்வாறான அபலைகளுக்கு உதவிட முடியும். முயற்சியுங்கள். பழைய யாழ்ப்பாணமாக, கற்றறிந்த பூமியாக உங்கள் பூமியை மாற்றியமையுங்கள். திரை நடிகர்களைப் போல வெளிச்சத்தில் மாத்திரம் மின்னுபவர்களல்ல; நீங்கள் நல்லவர்கள். உங்களால் முடியும். சிந்தியுங்கள்.

**- எம்.ரீஷான் ஷெரீப்**

# ஊர்காவற்றுறை மண்ணில் பல உத்தமர்கள் வாழ்ந்த புனித கிராமம் தம்பாட்டி




ஊர்காவற்றுறை புனித நன் நகரில் நாரந்தனைக்கு அருகில் உள்ள ஓர் பக்தி நெறிக் கிராமமே தம்பாட்டியாகும். இதன் பெருமைகளைப் பல் வேறு துறைசார்ந்த ரீதியில் ஆராயலாம்.

## தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பான்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு.





பாடசாலையின் பழைய மாணவர்களான தம்பித்துரை மகேஸ்வரன் பாலதுரை கருணாகரன் ஆகியோரால் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலையின் வளர்ச்சியில் பங்கெடுத்த இப்பழைய மாணவர்களின் செயற்பாடானது அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதாக ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சோமசுந்தரம் பாராட்டியுள்ளார். பான்ட் வாத்தியக் கருவிகள் தம்பாட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் வைத்து பாடசாலை சமூகத்திடம் ஒப்படைக்கப் பட்டன.



தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவு




குடிதண்ணீர் பிரச்சினை

## தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 10 இலட்சம் ரூபா நிதியுதவி

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு 10 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் ஹஸ்ரன் றோய் தலைமையில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கல வாத்தியம் சகிதம் பாடசாலை அதிபர் மைதானத்திற்கு அழைத்து வந்ததைத் தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.நிறைவில் பரிசளிப்பு நிகழ்வுகள் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அங்கு பாடசாலைச் சமூகம் விடுத்த பல்வேறு கோரிக்கைகளுக்கு அமைவாக அமைச்சர் சிறப்புரையாற்றும் போது போட்டோகொப்பி இயந்திரம் பல்லூடக தெளி கருவி, கணனி என்பவற்றைக் கொள்வனவு செய்வதன் ஊடாக பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் விதமாக 10 இலட்சம் ரூபா காசோலையை பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.இதன் மூலம் தற்பொழுது இப்பாடசாலையின் பல்வேறு தேவைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுகின்றது.



நுனிபுரம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தானம்

## பாய் விரித்து படகோட்டும் போட்டி



ஊர்காவற்றுறை தம்பாட்டி பகுதியில் நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளின் ஒரு அங்கமாக கடல்சார் போட்டியான பாய் விரித்து படகோட்டும் போட்டி தீவக படகுகளுக்கு இடையே 01.09.2014 அன்று திங்கட்கிழமை நடைபெற்றது.போட்டிகளை காந்திஜி விளையாட்டு கழகம் கடற்றொழிலாளர் சங்கங்கள், காந்திஜி சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்தியிருந்தன.இதில் A அணியும் B அணியுமாக இரு அணிகள் பங்குபற்றின. போட்டிக்குரிய படகுகள் யாவும் தம்பாட்டியிலிருந்து புறப்பட்டு அராலி துறைக்கு சென்று அங்கிருந்து போட்டிகள் ஆரம்பமாகின. A அணிக்கான போட்டியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கே.என்.விந்தன் கனகரத்தினம் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார்.A அணிக்கான போட்டியை கூட்டமைப்பின் முக்கியஸ்தரான ஹென்றி மகேந்திரன் ஆரம்பித்து வைத்தார்.குறித்த நிகழ்வில் தம்பாட்டி கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் சிவனேசப்பிள்ளை, செயலாளர் அன்னராசா, விளையாட்டு குழு தலைவர் கனகையா உட்பட பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்.



கால் பந்து அணி வீரர்கள்





தம்பாட்டி காந்திஜி முன்பள்ளியின் சிவபாதசுந்தரம் சிவவேந்தன் (பிரான்ஸ்) அனுசரணையுடன் சத்துணவு வழங்கும் திட்டம்!

# கூட்டுறவு சங்கசமாசத்தில் சர்வதேச கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன்வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் 92 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் செ. இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மக்கள் வங்கி. வடபிராந்திய முகாமையாளர் க.சுஜீந்திரன் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர் தி.சுந்தரலிங்கம் வவுனியா மாவட்ட சிக்கன கூட்டுறவு சங்க சமாச தலைவர் நா. சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கூட்டுறவு சங்க சமாச தலைவர் எஸ். கணபதிப் பிள்ளை மன்னார் மாவட்ட சிக்கன கூட்டுறவு சங்க சமாச தலைவர் ரி. மரியதாஸ், மருதனார்டம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி க.கிருஷ்ணபிள்ளை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.ஸ்ரீக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மாற்று வலுவுள்ளோர் ஒன்று கூடல் நிகழ்வு

(திருநெல்வேலி)

பெடஸ்தா நிறுவனம் வடமாகாண மாற்றுவலுவுள்ளோர் ஒன்று கூடல் நிகழ்வை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஏ.ஓ.ஜீ. மண்டபத்தில் நடாத்தியது

பெடஸ்தா நிறுவனத்தின் தலைவர் வண.ஜேம்ஸ் ரதீஸ்வரன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத் தூதுவராலய பிரதி இணைத்தூதுவர் எஸ்.ரீ. மூர்த்தி கலந்து கொண்டார். மானிப்பாய் சர்வதேச ஆங்கிலப்பாடசாலைப் பணிப்பாளர் வண.சாம் ராஜசூரியர், சுன்னாகம் வாழ்வகத்தலைவர் ஆ.ரவீந்திரன் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் கனகசபை, சமூக சேவைகள் உத்தியோகத்தர் சுரேஷ்குமார் வேல்ட்விஷன் தலைவர் ஜெராட் உட்படப்பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்தியத் துணைத்தூதுவருக்கு பெடஸ்தா நிறுவனப்பணிப்பாளரினால் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. இறுவட்டின் முதல் பிரதியை பெடஸ்தா நிறுவனப்பணிப்பாளரிடமிருந்து வண சாம் ராஜசூரியர் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து விருந்தினர்களுக்கு இறுவட்டுக்கள் வழங்கப்பட்டன. மாற்று வலுவுள்ளோரின் பல கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன. (137)




# கருத்துரை

எமது தாய் மொழியின் பெயர் "தமிழ்" என்பது. தமிழை "உயர் தனிச் செம்மொழி" என்பர் அறிஞர் தமிழ் உயர்ந்த மொழி தனித்த மொழி செம்மையான மொழி என்பது இதன் பொருள்.

"தமிழ்" என்பதற்கு "அழகு" எனவும் பொருள உண்டு இவ்வுண்மையை தமிழ் தழுவிய சாயல்" என்பதால் நன்கறியலாம்.

தமிழுக்கு "இனிமை" எனவும் பொருள் உண்டு இதனை தேன்தமிழ், தீந்தமிழ் என்ற அடைமொழிகள் மெய்பிக்கும்.

தமிழ் என்பதை தம் இழ் எனப் பிரித்து தம்மிடத்தில் "ழ்"லை உடையது தமிழ் எனப் பொருள கூறுவதுண்டு.

நாட்டிற்கு "செந்தமிழ்நாடு" என்ற பெயர் வைத்தவர் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார். இதில் நாட்டிற்கு அடைமொழியாகச் நமது மொழியும். மொழிக்கு அடைமொழியாக "செம்மையும்" அமைந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியதாகும்.

"தமிழுக்கு அமுதென்று பேர்" தமிழ் தமிழ் எனக் கூற அது அமிழ்து அமிழ்து என ஒலிக்கும். எனக் கூறி மகிழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை தமிழுக்கு அமுதென்று பேர் அது எங்கள் உயிருக்கு நேர் எனவும் கூறி உயிர் விட்ட கவிஞர் ஆவார்.

எனவே நமது தாய்மொழியாம் தமிழ் என்ற பெயருக்கே இவ்வளவு சிறப்பிருக்குமானால் ஏனையவற்றை குறிப்பிட வேண்டியதில்லை இன்றைய இளம் சமூகத்தினருக்கு "தமிழ்" மொழி பற்றிய விழிப்புணர்வு அவசியமாகிறது.

ஒருவருக்கு தாய் மொழியே சிந்தனை மொழியாக இருக்க முடியும் பல மொழிப் பாண்டித்தியம்பெற்றிருப்பது விரும்பப்படும் அதற்காக தாய் மொழியை ஒதுக்குவது சிறப்புடையது. அல்ல.

ஆங்கில மொழி மோகம் நம்மை கபாளீகரம் செய்ய வாய் திறந்து நிற்கின்றது. இப்படியான சூழ் நிலையில் தமிழ் வளர்த்த பெரியவர்கள் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளும் வகையில் எனது அன்புக்குரிய மாணவன் K.M.நித்தியானந்தன் "தமிழ் வளர்த்த முத்துக்கள்" எனும் வகையில் பத்து தமிழ் அறிஞர்கள் பற்றி எழுதிய கட்டுரை நூலை வாசித்தேன். நவாலியூர் சோமசுந்தரப் புலவரில் ஆரம்பித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலான பத்து அறிஞர்கள் பற்றி எழுதியுள்ளார்.

திருவள்ளுவர் பற்றிய கட்டுரையில், திருவள்ளுவர் வரலாற்றை எழுத முற்பட்டுள்ளார். வள்ளுவர் கதைகளுக்கு ஆதாரமில்லை என்பதால் தான் நமது ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் அவர்கள் நமது திருக்குறள் பதிப்பில் வள்ளுவர் வரலாறு எதனையும் பிரசுரிக்கவில்லை. திருவள்ளுவர் ஒன்றே செய்தார் அதனை நன்றே செய்தார். என்பது தான் அவரது வரலாறு.

சுப்பிரமணிய பாரதியாரின் தமிழ் உணர்வு, இறையுணர்வு பற்றிய கட்டுரையில் குயில் பாட்டு முதல் கண்ணன் பாட்டுவரை காதல் உணர்வுகள் வெளிப்படும் விதத்தில் பாடினார் என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும். "பாஞ்சாலி சபதம்" எனும் கவித் தொகுப்பில் பாஞ்சாலியைத் தாயாகக் கொண்டு "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" எனப் பாடுகிறார் எனும் கருத்தும் சரியானதாகப் படவில்லை.

நாவலரின் பெயர் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என எழுதப்படல்வேண்டும் எனக் கருதுகிறேன்.

பத்து வரலாறுகளும் "சிறுவர் நூல்" எனும் அடிப்படையில் வரவேற்கப்பட வேண்டும். நமது சிறுவர்களுக்கு தமிழ் வளர்த்த பெரியவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளார்கள். இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள நித்தியானந்தன் நூலை மறு பதிப்புச் செய்வதனால் நூலின் மெருகூடும். என நம்பலாம்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

என்னிடம் வந்த ஒரு வழக்கு இது. கணவன் மனைவி பிரிந்துவிட்டனர். ஒரு மகன், ஒரு மகள், இருவரும் தந்தையிடம் வசிப்பதாக நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லி, நடைமுறையில் இருக்கிறது. தாய் பிறகு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கிறார், இரு குழந்தைகளில் ஒருவராவது தன்னிடம் இருக்கவேண்டும் என்று.

வழக்கு என்னிடம் வருகிறது. இரு குழந்தைகளையும் அழைத்துக் கேட்டேன். இருவரும் தாய் முன்னிலையிலேயே தாங்கள் தாயிடம் செல்ல விரும்பவில்லை என்று சொல்லி விட்டார்கள். தாய் கதறி அழுகிறார். ஆனால் குழந்தைகள் மசிவதாக இல்லை. மகன், 'தாய் ஏமாற்றுகிறார், அவருடைய கண்ணீர் பொய்க் கண்ணீர்' என்கிறான்.

தாய் என்னிடம், குறைந்தபட்சம் சில நாள்களுக்காவது மகள் தன்னிடம் இருக்கவேண்டும் அதற்காகத் தீர்ப்புச் சொல்லவேண்டும் என்று கேட்கிறார். மகளை மட்டும் தனியாக அழைத்துப் பேசினேன். தான் தாயிடம் சில நாள்கள் இருப்பதில் சிக்கல் ஏதுமில்லை என்றாள். ஆனால் அப்படித் தான் விரும்பிச் சென்றுவிட்டால், மீண்டும் தமையனும் தகப்பனும் தன்னைச் சேர்த்துக்கொள்ளாமல் போய்விடுவார்கள் என்பதுதான் தன் பயம் என்று சொன்னாள்.

எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த மகளிடமே கேட்டேன். அதற்கு அந்தப் பெண் சொன்னாள்: 'என்னை என் தாயிடம் சில காலம் இருக்கச் சொல்லுமாறு நீங்கள் ஓர் உத்தரவு போடுங்கள். நான் அழுவேன், மாட்டேன் என்று முரண்டு பிடிப்பேன். ஆனால் நீங்கள் அதனை ஏற்காதீர்கள். பிறகு நான் திரும்பி வரும்போது என் அண்ணனும் தந்தையும் பிரச்சினை செய்ய மாட்டார்கள்.'

நான் அவ்வாறே செய்கிறேன். பலரும் என்னுடைய தீர்ப்பைக் குறை கூறுகிறார்கள். ஆனால் எனக்குத்தான் தெரியும் தருமம் பல நுண்கூறுகளைக் கொண்டது என்று.

**– நீதிபதி இராமசுப்ரமணியன்**

நாம் இப்போது இலட்சியங்கள் நாசமடைந்துபோன உலகில் வாழ்கிறோம். யாராவது ஒருவர் சற்றே தூய்மையானவராக இருப்பதைப் பார்த்தால் போதும், அவரை உடனே கறைப்படுத்தி நாசமாக்குகிறவரைக்கும் நமக்குத் தூக்கம் வருவதில்லை. யாரும் தூய்மையானவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்பதைப் பார்க்க விரும்புகிற காலத்தில் நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு வேலைக்குப் பின்னாலும் தன்னலமே இருக்கிறது என்பதைப் பார்க்க ஏன் விரும்புகிறோம் தெரியுமா? அப்போதுதான் சந்தைமயமான உலகில் எந்தவிதமான குற்றஉணர்ச்சியும் இல்லாமல் நம்மால் நிம்மதியாக வாழமுடியும் என்பதற்காகத்தான். **– விவேக் ஷான்பாக்**

நீங்கள் நல்வினையே புரிபவவராக இருந்தால் கூட, உங்களிடமிருந்து நல்வினை, தீவினை என்பது பற்றிய பிரக்ஞையும் நீங்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த அகங்காரமே இன்னொரு வினையாகி விடும். பல சமயங்களில் நம்மைப் பற்றி நம்முடைய அவதானம் தவறாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் நான் மிகவும் நல்லவன் என்று தானே நம்பிக் கொண்டிருக்கும் பல நல்ல மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்களால் அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் படும் சொல்லொணாத் துன்பத்தையும் கண்டிருக்கிறேன்.

எனவே, யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாதிருத்தலே நல்வினையின் முதல் படி. **– சாரு நிவேதிதா**

சகமனிதனை சகித்துக்கொள்ள முயல வேண்டும். சகமனிதனைப் புரிந்துகொள்ள முயல வேண்டும். முடியுமானால் நான் சகமனிதன்மீது அன்பு செய்ய முயல வேண்டும்...

உலகம் அயோக்கிய மயமாக இருக்கட்டும். நான் அதற்குத் தயாரில்லை.

உலகம் வன்முறைகளில் ஈடுபட்டுத் துன்புறட்டும். நான் அதற்குத் தயாரில்லை.

உலகம் கிட்னி திருடி, சாராயம் விற்று, கலப்படம் செய்து, மோசடி செய்து, விபச்சாரம் செய்து பணம் ஈட்டட்டும். நான் அதற்குத் தயாரில்லை.

ஏனெனில் என் போன்ற சிறுபான்மையினர், நம் போன்ற சிறுபான்மையினர் தாம் உலகத்தின் சமன் நிலையைக் காப்பாற்றி வருபவர்கள். நமக்கு வாய்த்திருக்கும் நல்ல தன்மைகளை அற்ப சுகங்களுக்காக இழக்க நாம் தயாராகஇல்லை.

**– நாஞ்சில் நாடன்**

# உள்நாட்டு விசாரணையை பலப்படுத்துவார் மைத்திரி

## கூறுகிறார் ராஜித

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சர்வதேச விசாரணைக்கு ஆதரவு வழங்கமாட்டார் எனவும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகளைப் பலப்படுத்துவார் என்றும் தெரிவித்துள்ளார், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

மைத்திரிபால சிறிசேனவின் பேச்சாளரான ராஜித சேனாரத்ன, இந்திய நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில், மேலும் கூறியிருப்பதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால், இந்திய அரசாங்கத்துக்கு கிட்டத்தட்ட இதுபோன்ற வாக்குறுதியே வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகாரத்தில் இருக்கும் வரையில் வடக்கிலுள்ள தமிழர்கள் அதிகாரப்பகிர்வை எதிர்பார்க்க முடியாது.

வடக்கு மக்களுக்கு எதையும் கொடுப்பதற்கு அவர் தயாராக இல்லை. அங்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள், தரகுப் பணத்தைப் பெறுவதற்காகவே மேற்கொளளப்பட்டன.

அங்குள்ள மக்களுக்கு அந்த அபிவிருத்தி திட்டங்களால் பயன் ஏற்படவில்லை. அவர்களுக்கு அது வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அரசாங்கத்தில் இருந்த போது சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புகளை நடைமுறைப் படுத்துவதற்காக நான் போராட வேண்டியிருந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூலம் எதையும் செய்ய முடியாது என்றுணர்ந்த நிலையில் தான் அதிலிருந்து வெளியேறினேன். நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, நல்லாட்சி, இந்தியாவில் உள்ளது போன்ற சுதந்திரமான தேர்தல் ஆணையம, பொதுச சேவைகள் ஆணைக்குழு, நீதித்துறை உள்ளிட்ட மறுசீரமைப்புகள் தான் இப்போது முதன்மைபெற்றுள்ளன.

இவையல்லாவற்றையும் செய்வதாக மகிந்த ராஜபக்ச வாக்குபுறுதி அளித்தார். ஆனால் அதனை அவர் காப்பாற்றவில்லை. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒருங்கிணைப்பு கூட்ட மோதல் விசாரணைகள் ஆரம்பம்

## பொலிஸ் தலைமையகம் தகவல்



(கொழும்பு)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மோதலுடன் தொடர்புடைய இரண்டு தரப்பினரும் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

மோதலில் காயமடைந்த ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூன்று உறுப்பினர்களும் அடங்குகின்றனர்

அவர்களில் ஐந்து பேர் ஏற்கனவே சிகிச்சைகளின் பின்னர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர்.

ஒருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான முழுமையான காணொளி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுமியை காணவில்லை பொலிஸில் முறைப்பாடு


(கொழும்பு)

யாழ்.கெருடாவில் மாயவனூர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமியை புதன்கிழமை முதல் காணவில்லையென சிறுமியின் பாட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை முறைப்பாடு செய்துள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டியிலுள்ள சமுர்த்தி வங்கிக்கு சென்றுவிட்டு வருவதாக கூறிச்சென்ற சிறுமி இதுவரை வீடு திரும்பவில்லையென சிறுமியின் பாட்டி முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பரமர் சங்கமம்



அதிஷ்டம் சொல்லிக் கொண்டு வருவதில்லை. சொல்லாமல் கொள்ளாமல் வருவதுதான் அதிஷ்டம் என்பர். கிட்டத்தட்ட அதிசயமும் அப்புடித்தான் எப்போதுமே இல்லாத புதிய ஒன்று அதிசயமான ஒன்றாகவே கணிக்கப்படுகிறது.

உலக அதிசயங்களாக இதுவரை ஏழு, எட்டு ஒப்ப தென்று அந்தப் பட்டியலும் அதிகரித்துக்கொண்டே போகுது. சமீபத்தில் துணைக்கண்டத்தில் அத்தகைய அதிசயமான செயற்பாடொன்று நிகழ்ந்ததை ஒலிபரப்பு ஊடகத்தில் கேக்க முடிஞ்சுது.

என்னெண்டா எவ்வித விசாரணைகளும் நடத்தப்பாமல் பல வருசக்கணக்கில் நிலுவையில் இருந்த 15 லட்சத்து 12 ஆயிரம் வழக்குகளை ஒரே நாளில் விசாணைை நடத்தித் தீர்ப்பு வழங்கப்பட்டதாகப் புதினம் தெரிவிக்கப்பட்டது.

சில அரசியல் வாதிகளின் பிழைகைகளை உலகிலேயே மிகப்பெரிய நகைச்சுவை எண்டு வர்ணிக்கிறது போலை இதையும் உலகத்திலேயே மிகப்பெரிய புதுமையாகத்தான் கொள்ள வேண்டும். இந்த வழக்குக் கணக்குகளில் அத்தனை ஆண்டுகளிலும் பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு இழப்பீடாக 1500 கோடி இந்திய ரூபாக்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எது எப்பிடிப் போனாலும் இத்தனை லட்சத்து அத்தினை ஆயிரம் வழங்குகளேம் ஒரே நாளில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கிறேன்டா எப்புடி இருக்கும் நீதியென்பது தலை கீழாத்தான் போயிருக்குமெண்டதை எந்தப் பாமரனும் சொல்லிப் போடுவான்.

அதுகுமில்லாமல் அத்தனை வழக்குகளிலும் குற்றவாளியாக அதுவரை காணப்பட்டவர்களை எந்தச் குற்றமும் இல்லாதவர்களாகவும் எண்ண முடியும். இதனாலோ அறிஞர் அண்ணா சட்டம் ஒர் இருட்டறை எண்டார்.

அது போகட்டும் எங்கடை ஸ்ரீலங்கா நாட்டுக்கு வருவம் இலங்கைச் சிறைச்சாலைகளிலும் எத்தினை பலதரப்பட்ட கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். மரண தண்டனை பெற்றவர் கடுங்குற்றங்களால் ஆயுள் தண்டனை பெற்றவர்களெண்டு இல்லாமல் எவ்வித வழக்குகள் பதியப்படாமலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படாமலும் ஆயிரக்கணக்கான கைதிகள் அடைக்கப்பட்டிருக்கின்றனர.

ஜனாதிபதித் தேர்தல் வைபவமொன்றில் பேசிய விடுதலைக்கான அமைப்பைச் சேர்ந்த தம்பிராசா எண்டவர் கூறியிருந்தார். ஜனாதிபதியவர்கள் புலிகளின் வங்கிகளில் அடகு வைத்த நகைகளை தமிழ் மக்களுக்குத் திரும்பி வழங்கியதைப் போன்று எவ்வித விசாரணையும் இல்லாமல் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுவித்தால அவர்களது குடும்பம் உறவுகள் அளிக்கும் வாக்குகளே ஜனாதிபதியை மீண்டும் அரசாசனம் ஏத்துமெண்டு.

அப்புடி ஒண்டை ஜனாதிபதி செய்வாராகில் தமிழ் மக்களின் அதிஷ்டம் மட்டுமில்லை மற்றொரு உலக அதிசயமாகவும் இருக்மெண்டு பரமரே சொல்லவேணும் சொல்லுங்க பாப்பம்..

## தொழிலாளர் உரிமை மேம்பாடு

# ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் இலங்கை முன்னணியில்

தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான சட்ட அமுல்படுத்தலில் ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் இலங்கை முதலிடத்தில் உள்ளதாக வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஆசிய தொழில் கூட்டுறவு மாநாடு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 3 திகதி வரை சீனாவில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ஐரோப்பிய ஆசிய நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். இலங்கை தொழில் திணைக்களத்தில் இருந்து 6 பேர் கொண்ட குழு வினர் கலந்து கொண்டோம்.

கலந்துகொண்ட ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளும் தமது நாட்டின் தொழில் திணைக்கள திட்டங்கள் தொடர்பான சட்டங்கள, கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் பெறுபேற்றில் தொழிலாளர்களில் சமூக பாதுகாப்பு திட்டம், வேலை உரிமைகள், தொழிலாளர் பாதுகாப்பு போன்ற விடயங்களில் மற்றைய நாடு களை விட் இலங்கை முன்ன ணியில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் மலையகத்தில் பாரிய அபிவிருத்தி

## அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் மலையகத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமை.

மகிந்த அரசாங்கத்தில் மலையக மக்களுக்கு பெரும் வரப் பிரசாதமாகும் என அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் முகமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மக்கள் சந்திப்பொன்று கால் நடைவுள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் கொட்டகலை தொழிற் பயிற்சி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வீடமைப்பு, மற்றும் மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் திவிநெகும, கமநெகும வேலைத் திட்டத்தின் ஊடாக தோட்டப்புற பாதைகள் கொங்கிறீட் பாதைகளாகவும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சர்வ மத வழிபாட்டுத் தல நிர்மாண பணிகளுக்காக நிதியொதுக்கப்பட்டு செப்பனடப்பட்டும் வருகின்றது.

பெருந்தோட்ட புற படித்த இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக தொண்டமான் ஞாபகார்த்த மன்ற பிரஜாசக்தி நவசக்தி செயற்றிட்டத்தினூடாக நுவரெ லியா மாவட்டத்தில் 3100 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள், ஆடுகள் ,மாடுகள், பன்றிகள் ,மாட்டுத்தொழுவம் அமைப்பதற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.


# முற்றுப் பெறாத திருத்தப் பணி

புத்தூர் வடக்கு அண்ணமார் வீதியின் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதியூடாக போக்குவரத்தை மேற்கொள்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்த வீதியானது தொடந்தும் குண்டும் குழியுமான நிலையிலேயே காணப்படுகின்றது. மேலும் வீதியில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட மக்கி, கல் என்பன கனரக வாகனம் மூலம் வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவீக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபை யில் முறையிட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை எனவும் பயணிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த வீதியின் திருத் தப்பணிகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)


33. கீழே ஒன்று உருவை A அம்புக்குறி வழியே பார்க்கும் போது தோன்றும் வடிவம் எது?



34. கடிதம் என்பதை  எனக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதினால் தகரம் என்பதை எவ்வாறு எழுதலாம்



❖ கீழ்வரும் கணிதச்செய்கையை அவதானித்து 35ஆம், 36ஆம் வினாக்களுக்குரிய விடையை தெரிக



35. ◎ இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 15 2) 20 3) 25

36. ✣ + ✺ கூட்டல் செய்கைக்கு வரவேண்டிய விடை யாது?
1) 40 2) 35 3) 45

❖ 37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக
கோலத்தை அவதானித்து ? இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுக

37.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | # | 16 | ⬆ | 11 |
| 10 | ⬆ | 5 | # | 25 |
| 3 | # | ? | ⬆ | 4 |


..............

38.

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | ⊠ | 9 | ⊘ | 12 |
| 7 | ⊘ | 10 | ⊠ | 5 |
| 28 | ⊠ | ? | ⊘ | ? |

..............

வரன், நிமலன், ஜோன் ஆகிய மூவரும் A,B,C என்ற எழுத்துக்களால் குறிக்கப்படும் இடங்களில் இருந்து பயணத்தை ஆரம்பித்து X,Y,Z என்னும் இடங்களை சென்றடைந்த பயணப்பாதை கீழே தரப்பட்டுள்ளது




39. இம் மூவரிடையே அதிக தூரம் பயணம் செய்தவர் யார்? ..........................................

40. நிமல் எத்தனை தடவைகள் வலப்பக்கமாக திரும்பி பயணம் செய்தான்?
..........................................

41. ஒரு பெட்டியில் 75 புத்தகங்கள் அடுக்க முடியும். அவ்வாறான 15 பெட்டிகளில் அடுக்கக்கூடிய புத்தகங்கள் எத்தனை?
..........................................

கடந்த 17.12.2014 பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1). 1 | (2). 3 | (3). 2 | (4). 1 | (5). வாமதி | (6).2 | (7).2 | (8). 2 | (9). 3 | (10). 2 |
| (11).2 | (12).2 | (13).3 | (14).2 | (15).2 | (16).3 | (17).2 | (18).3 | (19).3 | (20). 2 |
| (21).3 | (22).2 | (23).1 | (24).2 | (25).1 | (26).3 | (27).3 | (28).1 | (29).1 | (30).1 |
| (31).2 | (32).2 | (33).2 | (34).2 | (35).1 | (36).3 | (37).2 | (38).3 | (39).3 | (40).கொங்கொலகொடபண்டா |

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



## தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - I
45 நிமிடம்



# கல்வி முரசு



1 தொடக்கம் 41 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க


❖ தரப்பட்டுள்ள கவிதையை கொண்டு விடை எழுதுக

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்
மலரும் மலர்களே எங்கும் மணம் பரப்பும்
அதிகாலையில் பொழுதோ இன்பம் ஊட்டும்

01. இக்கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள காலையில் வீசும் காற்று
1) பறவைகளின் கீத ஒலி கேட்க செய்யும் என்பதை
2) உடலுக்கு குளிர்ச்சி தரும் என்பதை
3) மலர்கள் மணம் பரப்பும் என்பதை

02. காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத விடயம்
1) குளிர்ச்சியான தென்றல் காற்று வீசும்
2) நறுமணமுள்ள மலர்கள் மலருதல்
3) ஒளி மெதுவாகப் பரவுதல்


03. சாக்கு ஒன்றில் 47kg 500g தானியத்தை நிரப்பமுடியும். அச்சாக்கில் தற்போது 13kg 750g தானியம் உள்ளது. இச்சாக்கை நிரப்புவதற்கு மேலும் இடப்பட வேண்டிய தானியத்தின் அளவு யாது?
..........................................

04.  நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு 8cm எனின் முழு உருவின் சுற்றளவு யாது?
1) 32cm 2) 24cm 3) 33cm

05. மேமாதம் 13ஆம் திகதி வியாழக்கிழமை எனின் யூன்மாதம் 13ஆம் திகதி என்ன கிழமை?
1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) ஞாயிற்றுக்கிழமை

06. 28 — 21 — 15 — ... — 6 — 3 வெற்றுக்கூட்டத்தினுள் வரவேண்டிய எண் யாது?
1) 10 2) 9 3) 11

07. என்னை வீட்டில் கோமாதா என்று போற்றி வருகின்றனர். என் உறைவிடமும் நன்றாக உள்ளது. வேளை தவறாது எனக்கு உணவு தருகிறார்கள் நான் யார்?
1) நாய் 2) பூனை 3) பசு

08. 
இரண்டு கூம்பகங்களின் சதுர்முகங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்ட அமைப்பு தரப்பட்டுள்ளது. இவ்வுருவில் உள்ள முகங்கள் எத்தனை?
1) 10 2) 8 3) 6

09. இருண்ட ,நீல, அழகிய போன்ற அடைமொழிகள் பயன்படுத்தப்படும் சொல் எது?
1) வானம் 2) பூ 3) சட்டை

10. காற்று வீசினால் வெப்பம் குறையும், காற்று வீசவில்லை எனவே
1) வெப்பம் அதிகரிக்கும் 2) வெப்பம் குறையும் 3) வெப்பம் மாறாதிருக்கும்


11. கொங்கிறீட் கலவை ஒன்றை தயாரிப்பதற்கு சீமெந்து கூடைகளில் இருமடங்கு மணற்கூடைகளும் மணற்கூடைகளில் மூன்று மடங்கு கருங்கற்கூடைகளும் எடுக்கப்பட்டன. 180கூடைகள் கருங்கற்கள் எடுக்கப்பட்டன. எனின் கலவை ஒன்றுக்கு எடுக்கப்படவேண்டிய சிமெந்துக்கூடைகளின் எண்ணிக்கை யாது?
1) 45 2) 30 3) 60

❖ கீழே சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன
A - இருபதைவிட பத்து பெறுமதி குறைந்தது
B - ஆண்களை விட பெண்கள் உயரமானவர்
C - வானம் கறுத்தால் மழைபெய்யும்
D - சூரியன் மேற்கு வானில் மறையும்
E - மகளைவிட தாய் வயதில் கூடியவர்
F - பூக்கள் யாவும் காலையில் மலர்கின்றன

12. எப்போதும் உண்மையாக இருக்கக்கூடிய கூற்றுக்களை கொண்ட விடை எது?
1) A.C.F 2) A.D.E 3) B.C.F

13. சில வேளைகளில் உண்மையாக இருக்கக்கூடிய கூற்றுக்களைக் கொண்ட விடை எது?
1) B.C.F 2) A.B.C 3) C.E.f


❖ குறித்த நகரில் பாடசாலை, வங்கி, சந்தை, மருத்துவமனை, நூலகம் என்பன அமைந்துள்ள விதமும் அவற்றை இணைக்கும் வீதிகளும் உருவில் காணப்படுகின்றன




14. சந்தையில் இருந்து நூலகம் ஊடாக வங்கிக்கு செல்வதற்கு குறுகிய தூரம் யாது?
1) 1200m
2) 1100m
3) 1250m

15. ஒருவர் பாடசாலையில் இருந்து நூலகம் ஊடாக மருத்தவமனைக்கு 'சென்று அங்கிருந்து சந்தைக்குச் சென்று மீண்டும் அதே வழியாக பாடசாலையை அடைந்தார். எனின் அவர் சென்ற மொத்தத்தூரம் யாது?
1) 1150m 2) 2300m 3) 2100m

16. முதலில் தரப்பட்ட வடிவத்துக்கு சமனாக அமையாத வடிவத்தை தெரிந்து கோடிடுக




17. காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய முக்கிய விளைவு எது?
1) மிருகங்களுக்கு வாழ்விடம் இல்லாமல் போதல்
2) மழைவீழ்ச்சி குறைவடைதல்
3) தளபாடம் செய்ய முடியாமல் போதல்

| | | | |
|---|---|---|---|
| 8 10 3 | 10 15 6 | 12 9 3 | 6 .... 8 |

18. மேலே உள்ள எண்கோலத்தில் வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணை தெரிக?
1) 6 2) 14 3) 12

19. 8m நீளமும் 8m அகலமும் உடைய தரைக்கு தரையோடு பதிப்பதற்கு ரூபா2800 கூலி வழங்கப்பட்டது. எனின் 4m நீளமும் 4m அகலமும் உள்ள நிலத்திற்கு தரையோடு பதிப்பதற்கு எவ்வளவு செலவாகும்?
1) ரூபா 1400 2) ரூபா 700 3) ரூபா 1100

20. 26 - 11 இப்பிரசின்னத்துக்கு சமனான பிரசினம் எது?
1) 8 7 2) 6 X 3 3) 42 3




❖ 21 தொடக்கம் 23 வரையான வினாக்களுக்கான வெற்றிடத்திற்கு நன்கு பொருந்தக்கூடிய விடையின் கீழ் கோடிடுக

21. உடைகள் மனிதர் ...................... போலக்கருதும் ...................... காத்து வருகின்றன
1) அன்பு, அழகை 2) உறவு, அன்பை 3) உயிர், மானத்தை

22 .............. ஐப்பசி மாதத்தில் தீபங்களை ஏற்றி ................ பண்டிகையை கொண்டாடுவர்
1) இந்துக்கள், தீபாவளி 2) பௌத்தர், வெசாக் 3) கிறிஸ்தவர், ஈஸ்டர்

23. மிகவும் ...................... மரணமடைந்த ................ நிலை எல்லோரையும் கவலையடையச் செய்தது
1) சௌகரியமாக, சிறுவனின் 2) பரிதாபமாக, பிச்சைக்காரனின் 3) கீழ்தரமாக, நாயின்

❖ நான்கு மாணவிகளின் உயரம் கீழேதரப்பட்டுள்ளது




24. இவர்களில் உயரம் கூடியவர் யார்?
1) கலா 2) மீரா 3) மேரி

25. இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
1) தேவி 2) மீரா 3) கலா

26. பின்வரும் கூற்றுக்களில் எது முழுமையான உண்மையாகும்?
1) வருடம் ஒன்றில் 51 வாரங்கள் உள்ளன.
2) சந்திரன் பூமியை சுற்றிவர எடுக்கும் நாட்கள் 14ஆகும்.
3) வருடம் ஒன்றில் 30 நாட்களைக்கொண்ட 4 மாதங்கள் உள்ளன.

27. 100தொடக்கம் 110 வரை எழுதும் போது கிடைக்கும் பூச்ஜியங்கள் எத்தனை?
1) 10 2) 11 3) 12

28. 2010 ஆம் ஆண்டு நத்தார்தினம் சனிக்கிழமையாகும் எனின், 2012 ஆம் ஆண்டு நத்தார்தினம் வரும் நாள் எது?
1) ஞாயிற்றுக்கிழமை 2) செவ்வாய்க்கிழமை 3) திங்கட்கிழமை

29. இரண்டு நண்பர்கள் ஓரிடத்தில் இருந்து புறப்பட்டு ஒருவர் கிழக்கு நோக்கியும் மற்றையவர் மேற்கு நோக்கியும் 100m வீதம் பயணித்தனர். ஒருவர் வலது புறமாகவும் மற்றையவர் இடது புறமாகவும் திரும்பி 50m வீதம் பயணித்தனர். அப்போது இருவரும் நிற்பது எவ்வளவு தூரத்திலாகும்?
1) 300m 2) 150m 3) 200m

30. ஊர்வசி தனது 17ஆவது பிறந்தநாளை இவ்வாண்டு கொண்டாடினாள் எனின் அவள் பிறந்த ஆண்டு பற்றி கூறக்கூடியது
1) அவள் நெட்டாண்டில் பிறந்தாள்
2) நெட்டாண்டுக்கு முந்திய ஆண்டில் பிறந்தாள்
3) நெட்டாண்டக்கு அடுத்த ஆண்டில் பிறந்தாள்

31. நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16km தூரம் சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் சென்ற தூரம் யாது?
1) 1km 2) 4km 3) 5km

32. செவ்வகவடிவ கண்ணாடித் துண்டு ஒன்று இரு பகுதிகளாக உடைந்துள்ளது. உடைந்த ஒரு பகுதி முதலில் தரப்பட்டுள்ளது. மற்றைய பகுதியை தரப்பட்ட விடைகளில் தெரிந்து கீறிடுக







சுன்னாகம் லயன்ஸ் கழகத்திற்கு அண்மையில் லயன் வலயத்தலைவர் வருகை தந்தார். இவரை வரவேற்கும் நிகழ்வில் கழக உறுப்பினர் மங்கள விளக்கேற்றுவதையும், லயன் வலயத் தலைவர் மாணவிக்கு உபகரணம் வழங்குவதைக் காணலாம் (48)

# ஆன்மீக நிகழ்வு

(கரணவாய்)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஸ்ரீ பக்த விஜயம் என்னும் தலைப்பில் சொற் பொழிவு இடம்பெறும்.

இளைப்பாறிய நில அளவையாளரும், ஆன்மீக வாதியுமான வ.ஆ.தங்கமயில் இச்சொற்பொழிவை நிகழ்த்துவார். (18)

# திட்டமிடப்படாத நடைமுறைகள் பாதிக்கப்படும் வடக்கின் கல்வி நிலை

## சுட்டிக்காட்டுகிறது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

**பல்வேறு அழிவுகளையும், அனர்த்தங்களையும் சந்தித்த வடக்கு மாகாணம் கல்வியில் மீண்டும் புத்துயிர் பெறும் என்ற எண்ணம் எல்லோர் மனங்களிலும் துளிர்விட்ட நிலையில். வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் போக்குகளும் தற்போதைய பதில் மாகாணக்கல்விப் பணிப்பாளரின் திட்டமிடப்படாத நடைமுறைகளும் அழிவுப்பாதைக்கு கல்வியை தள்ளத் தொடங்கிவிட்டன என இலங்கைத்தமிழாசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.**

அச்சங்கம் இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் உள்ள தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை எதுவுமே தெரியாத அளவுக்கு கணக்கெடுப்புகள் ஸ்தம்பித்த நிலையில் உள்ளன. இவ்வருடம் ஆனி மாதத்திற்குப் பிறகு எந்தவிதமான கணக்கெடுப்புகளும் நடைபெறவில்லை. ஆசிரிய பற்றாக்குறைகள் பற்றி பலரும் பலவாறு பேசியவண்ண முள்ளனர். அவைபற்றி இன்னும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தீர்க்கமான முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை.

வடக்கு மாகாணத்தில் உள்ள கற்பித்தல் பணியில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 14 403 தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை 14 708. ஆக இன்னும் வடக்கு மாகாணத்திற்கு கற்பித்தல் பணிக்காக 305 ஆசிரியர்கள் தேவை என்பதனை ஆனி மாதக் கணிப்பீட்டின்மூலம் அறியப்படுகின்றது. அதன் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை இதற்குள் அடங்கவில்லை.

அதன் அடிப்படையில் ஒவ்வொரு வலயங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரிய ஆளணியும் தற்போது கற்பித்தல் பணியில் உள்ள ஆசிரிய ஆளணியுமாக முறையே யாழ்.வலயத்தில் 2302 ஆசிரியர் ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 2372 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். வலிகாம வலயத்தில் 2018 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1905 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். வடமராட்சி வலயத்தில் 1387 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1367 ஆசிரயர்களே கடமையாற்றுகின்றனர். தென்மராட்சி வலயத்தில் 850 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 876 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். தீவக வலயத்தில் 638 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 575ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். கிளிநொச்சி வலயத்தில் 1735 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1807 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். மன்னார் வலயத்தில் 1278 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1297 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர்.

மடு வலயத்தில் 432 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1278 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். வவுனியா வடக்கு வலயத்தில் 673 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கபட்ட நிலையில் 555 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர்.

வவுனியா தெற்கு வலயத்தில் 1698 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1666 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். முல்லைத்தீவு வலயத்தில் 1096 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 1046 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர். துணுக்காய் வலயத்தில் 580 ஆசிரிய ஆளணி அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 499 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர்

இவ்வாறு ஆசிரிய பற்றாக்குறை உள்ள நிலையில் விடுபட்ட தொண்டர் ஆசிரியர்களும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் சரியான தகைமைகளுடன் காத்திருக்கின்றனர். ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தவண்ணமுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கான நியமனங்களை வழங்கியாவது அதனை நிவர்த்தி செய்ய முடியும்.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் நியமனம் முறைப்படி நடைபெறவில்லையெனில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முன்பாக தொடர்போராட்டங்களை நடாத்துவதற்கு நாம் முடிவெடுத்துள்ளோம். என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

# தொழிற்பயிற்சி அதிகாரசபையால் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்


(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடாத்தி வருகின்றது.

இக்கற்கைநெறிகள் கைதடி, காரைநகர், சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றது.

மரவேலை தொழில் நுட்பவியலாளர் தளாபடம், கட்டட நிர்மாண உதவியாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர சாதனங்கள் திருத்துநர், இருசக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், குளிரூட்டி இயந்திர சாதனங்கள் திருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர், முன்பள்ளி கற்பித்தல் முறையியல் கற்கை, பெண்கள் சிறுவர்களிற்கான ஆடைவடிவமைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், வீட்டுமின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துனர், அழகுக்கலை வல்லுநர், கணனி படவடிவமைப்பாளர், வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துநர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர் இவ்வனைத்து கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகள் கற்க விரும்பவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில மாவட்ட அலுவலகம் 1 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல. 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் தொ.பே.இல (021 222 7949) அல்லது எமது தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு சபையின் உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.



நெல்லியடி கோவில் சந்தைப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தை நெல்லியடி பொலிஸார் புனர்நிர்மாணம் செய்து வர்ணம் பூசி மக்களிடம் கையளித்துள்ளனர். புனரமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தைக் காணலாம். (18)

# புத்தூர் நவக்கிரிப்பகுதியிலுள்ள ஆசிரியர் வீட்டில் கொள்ளை

(அச்சுவேலி)

புத்தூர், நவக்கிரிப் பகுதியில் இராச வீதிக்கு அண்மையில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டினுள் நள்ளிரவு வேளை புகுந்த இரு திருடர்கள் வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்திவிட்டு அங்கிருந்த தங்கச்சங்கிலியினையும், வேறுசில பொருட்களையும் இலாபகமாக சுருட்டிக் கொண்டு தப்பியோடிய சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று முன்னிரவு வேளையிலேயே திருட்டு இடம்பெற்ற வீட்டிற்கு அண்மையிலுள்ள ஆட்களற்ற வீட்டினுள் புகுந்து பதுங்கிக் கொண்ட திருடர்கள் வீட்டிலுள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நேரம் பார்த்து பின்னிரவு வேளையில் நன்கு திட்டமிட்டு வீட்டுக் கூரையில் இருந்த ஓட்டினை கழற்றி வீட்டினுள் நுழைந்து ஆசிரியையின் கணவர் உறங்கிக் கொண்டிருந்த அறையினுள் சென்று அங்கிருந்த அலுமாரியினை திறந்து அதற்குள் இருந்த பொருட்களை ஆராய்ந்து கொண்டிருந்த போது உறக்கத்திலிருந்த ஆசிரியையின் கணவர் சத்தம் கேட்டு எழுந்தபோது ஒருவர் அவரது தலையில் கொட்டனை ஓங்கியபடி சத்தமிட வேணடாம் என அச்சுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஆசிரியை சந்தேகம் கொண்டு தனது கணவரை அழைத்த போது. அவரது குரலில் ஏற்பட்டிருந்த தடுமாற்றத்தினை உணர்ந்து கணவருக்கு ஏதாவது சுகயீனமாக இருக்குமோ என நினைத்து அவரது அறையை நோக்கி சென்றபோது திருடர்கள் அவரையும் சத்தமிட வேண்டாம் எனக் கூறி விட்டு அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் வேறுசில பெறுமதியான பொருட களையும் எடுத்துக் கொண்டு திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இதுதொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்கு உடனடியாக தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)



# தலிபான் தீவிரவாதிகளின் கொடூர செயல்

## 132 குழந்தைகள் உட்பட 145 பேர் பலி




பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் உள்ள இராணுவ பள்ளி ஒன்றில் புகுந்த 6 தலிபான் தீவிரவாதிகள் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 132 குழந்தைகள் உட்பட 145 பேர் பலியாகி உள்ளனர்.

படுகாயமடைந்த நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் குழந்தைகளைக் கொன்று குவித்த தீவிரவாதிகளின் புகைப்படங்களை, தங்களது தளத்தில் தலிபான்கள் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து தலிபான்கள் கூறியதாவது, வடக்கு வாஜிரிஸ்தானில் எங்களுக்கு எதிராக இராணுவம் எடுக்கிற நடவடிக்கைக்கு பழிக்கு பழிவாங்கத் தான் இராணுவ பள்ளிக்கூடத்தை குறி வைத்து தாக்குதல் நடாத்தியதுடன் எங்கள் வலியை, வேதனையை அவர்கள் உணர வேண்டும் என விரும்புகிறோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே இராணுவத் தளபதியைத் திருமணம் செய்து கொண்டதற்காகவே அப்பள்ளியின் முதல்வரை குறிவைத்து கொலை செய்துள்ளதாக, தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# துயரத்தில் மூழ்கியது பெஷாவர் நகரம்



பாகிஸ்தானின் பெஷாவர் நகர் மீளாத் துயரில் ஆழ்ந்துள்ளது. பள்ளிக் குழந்தைகள் மீதான தீவிரவாதிகளின் வெறித்தாக்குதலால் 132 குழந்தைகள் உட்பட 148 பேர் பலியா யினர்.


நேற்றுமுன்தினம் பெஷாவர் நகரில் எந்த வீதியில் பார்த்தாலும் இறுதி ஊர்வலமே நடைபெற்றது. குழந்தைகளை இழந்தவர்கள், அவர்களின் உறவினர்கள், நண்பர்கள், பொது மக்கள் என அனைவரின் கதறலகள் அந்த கரத்தையே உலுககியது. கண்ணீரை அடக்க முடியாமல் சவப்பெட்டிகளை மக்கள் சுமந்து சென்ற காட்சி பார்ப்பவர்களின் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

பெஷாவர் நகர் அமைந்துள்ள கைபர் பக் துன்கவா மாகாணத்தில் மூன்று நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்ததால், அங்கு எந்தவொரு அரசு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. சோகம் கவிழ்ந்த அந்நகரில் நேற்றுமுன்தினம் எங்கு பார்த்தாலும் சவ ஊர்வலங்களாக ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தீவிரவாதத்தின் கோரமுகத்தை விளக்குவதற்கு இதைவிட தெளிவான சாட்சியம் வேறு எதுவும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வெற்றிகரமாக விண்ணுக்கு

## ஜி.எஸ்.எல்.வி. மார்க் - 3 ரொக்கெட்

ஜி.எஸ்.எல்.வி மார்க் - 3 ரொக்கெட், ஸ்ரஹரிகோட்டாவில் இருந்து நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப் பட்டுள்ளது. "இஸ்ரோவின் விண்வெளி ஆராய்ச்சிக்கு மனிதனை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தின் அடுத்த மைல் கல்லாக கருதப்படும் இந்த முயற்சி வெற்றி பெற்றது. இதில் பெருமிதம் அடைவதாக இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளதுடன் இந்த சாதனை வெற்றியை நிகழ்த்த உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளதோடு திட்டமிட்டபடி மாதிரி விண்கலம் வங்கக்கடலில் இறக்கப்பட்டது" என்றார்.



# 13ஆவது...

நீங்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் எதை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள்?....

சிங்கள ஆளுநரை மாற்றுவோம் என்றீர்கள், படையினரை வெளியேற்றுவோம் என்றீர்கள், வட மாகாண சபை உங்கள் வசம் கிடைத்ததால் தமிழரசு அமையும் என்றீர்கள். ஒருவேளை சோறு, பருப்புக் கூட உங்கள் அதிகாரத்தை வைத்து மக்களுக்கு நீங்கள் வழங்க விரும்பினீர்களா?...

எந்த வழிமுறையை, பொறிமுறையை வைத்துக் கொண்டு நீங்கள் இந்த வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினீர்கள்?....

முதலில் அதை மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி கூறி வருகிறீர்கள். நான் உங்களைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக இதைக் கூறவில்லை.

உங்களுக்கு ஒருபோதும் சம்பந்தமில்லாத, நீங்கள் சிறுதுளி வியர்வை கூட சிந்தியிருக்காத போலியான தமிழ்த் தேசியத்தை உச்சரித்து பொய்யுரைத்துத்தான் நீங்கள் வெற்றி பெற்றீர்கள்.

நாங்கள் போலித் தமிழ்த் தேசியம் பேசாமல், பொய் பேசாமல் நேர்மையான தமிழ்த் தேசிய உணர்வுகளை எங்கள் செயலில் காட்டிப் பல்லாயிரம் மக்களின் வாக்குகளைப் பெற்று மாகாண சபையில் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம்.

முடிந்தால் நீங்கள் உங்களுக்குச் சம்பந்தமே இல்லாத தமிழ்த் தேசியத்தை உச்சரிக்காமல் ஒரு முறை தேர்தலில் போட்டியிட்டுப் பாருங்கள்.

உண்மையான தமிழ்த் தேசியத்தை நடைமுறையில் கொண்டிருக்கும் எமக்குக் கிடைத்த பல்லாயிரம் வாக்குகளில் சிலநூறு வாக்குகள் கூட உங்களுக்கு கிடைக்காது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஆதாரமற்ற பொய்களைக் கூறி நீங்கள் உங்கள் தவறுகளை நியாயப்படுத்துவதற்காக எங்கள் மீது அவதூறு பொழிந்து கொண்டிருப்பதால் ஒன்றும் ஆகப்போவதில்லை.

நாமும் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையே உருவாகும்.

வேற்றுமைக்குள் ஒற்றுமை கண்டு வடமாகாண சபையை எமது மக்களின் கனவுகளை நிறைவேற்றப் பயன்படுத்துவோம் வாருங்கள் என்று நான் நேசமுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிரை அழைக்கின்றேன்.

# கட்டாய திருமணத்திற்கு மறுப்பு

## 150 பெண்களின் தலைகள் துண்டிப்பு

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை திருமணம் செய்ய மறுத்த 150 பெண்களின் தலைகள் துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் தொடர்ந்து பல அட்டூழியங்களை செய்து வருகின்றது. இந்நிலையில் தங்களது இயக்கத்தில் உள்ள பெண்கள், தங்களை திருமணம் செய்ய வேண்டும் என தீவிரவாதிகள் கட்டாயப்படுத்தியுள்ளனர். இதற்கு ஒப்புக்கொள்ளாத 150 பெண்களை ஈராக்கில் உள்ள அல்-அன்பர் மாகாணத்தில் வைத்து கொடூரமாகத் தலைகளைத் துண்டித்துப் படுகொலை செய்துள்ளதாக, அந்நாட்டின் மனித உரிமை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த படுகொலையில் கர்ப்பிணிகளும் கொல்லப்பட்டதாக கூறப்படுவதுடன் கொலை செய்த அனைவரையும் ஒரே இடத்தில் தீவிரவாதிகள் புதைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# முதன் முறையாக பெண் "ஆயர்"

## இங்கிலாந்தில் நியமனம்



இங்கிலாந்து நாட்டில் முதன் முறையாக பெண் ஒருவரை "ஆயர்" ஆக இங்கிலாந்து தேவாலயம் நியமித்துள்ளது. பல நூற்றாண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரிய முறையைக் கடந்து இந்த நியமனம் அமைந்துள்ளது.

வட இங்கிலாந்தின் ஸ்டாக்போர்ட் நகர ஆயராக லிப்பி லேன் என்ற பெண்மணி நியமிக்கப்பட்டுள்ளார். பெண் ஒருவரை ஆயராக ஆக்குவது என்பது 'நடைமுறையில் இல்லாத நிலையில் இது தொடர்பாக நீண்ட காலமாக மற்றும் சில நேரங்களில் காரசார விவாதங்களுடன் இந்த விவகாரம் தொடர்ந்து நீடித்து வந்தது.

இந்நிலையில் கடந்த ஜூலையில், பெண்கள் ஆயராக வருவதற்கு இங்கிலாந்தின் தேவாலயத்தின் ஆளும் அமைப்பான சினோட இதற்கு ஒப்புதல் வழங்கியது. இதனை அடுத்து கடந்த மாதம் முறையாக இது சட்ட வடிவமாக்கப்பட்டது. கடந்த 1994 ஆம் ஆண்டில் இருந்து பெண்கள் தேவாலயங்களில் அருட்தந்தையர்களாக உள்ளனர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து**

**கேள்விப் பத்திரம் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியற் பீடத்தின் பாவனைக்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. வாகனத்தின் முதற் பதிவு 05 வருடங்களுக்கு மேற்படாமலும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 07 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும் படி வேண்டப்படுவார்.

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான் (14 அல்லது 15 ஆசனங்கள்) | டீசல் (dual A/C) | 01 |

விண்ணப்பப்படிவம், விலைமனு ஆவணங்கள் மற்றும் மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் 29,12.2014 நண்பகல் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர், நிர்வாகக்கிளை இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டு 02.01.2015 பி.ப.2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண். 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் 02.01.2015 அன்று பி.ப.2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும் மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது

தலைவர்
கேள்விச்சபை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
16.12.2014

(C/3954)

# இது அபிவிருத்தியின் தேர்தல் இனவாதம் பேசும் தேர்தல் அல்ல

## செம்மலை மகா வித்தியாலய அதிபர் தெரிவிப்பு

இது இனவாத தேர்தல் அல்ல. அபிவிருத்தி பற்றி நினைத்துப்பார்க்கவேண்டிய தேர்தல். நாட்டின் வெற்றியை தீர்மானிக்கும் தேர்தல். முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியை தீர்மானிக்கும் தேர்தல். நான் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று உங்களுக்கு கூறப்போவதில்லை. எட்டு விடயங்களை முன்வைக்கிறேன். அதனைக் கேட்டுவிட்டு யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்று நீங்கள் தீர்மானியுங்கள் என முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய அதிபர் விஜயரத்தினம் தெரிவித்தார்.

நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நான் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி என்னோடு கதைத்தார். உங்கள் மாவட்டத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்று அவர் என்னிடம் கேட்டார். அதன் போது நான் 8 விடயங்களை முன்வைத்தேன்.

முதலாவது விடயம் என்ன வென்றால் போரில் எம்மக்கள் அனைவரின் வீடுகளும் சிதைந்து போய்விட்டன. அனைவருக்கும் வீடுகளை அமைத்துக் கொடுங்கள் என்று கேட்டேன். மெதுவாக தலையாட்டினார்.

இரண்டாவதாக எனது மாவட்டத்தின் பாதைகள் அனைத்தும் குன்றும் குழியுமாக உள்ளன. எனக்கு இப்போது 54 வயதாகிறது. இந்த வயதில் என்னால் இப்பாதைகளில் செல்வது மிகவும் சிரமாக இருக்கும் என்றேன். அவர் மெதுவாக தலையசைத்தார்.

மூன்றாவதாக எனக்கு இன்று 54 வயதாகிறது. ஆனால் இன்னமும் மின் கம்பிகளை எனது மாவட்டத்தில் காணவில்லை. எம் மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்கும் மெதுவாக தலையசைத்தார்.

ஐந்தாவதாக முகாம்களில் நாம் இருக்கும் போது விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் வந்து வாகனத்தில் ஏறுங்கள். உங்களுக்கு புனர்வாழ்வளிப்போம். மீண்டும் உங்கள் குடும்பத்துடன் சேர்ப்போம் என ஒலிபெருக்கியில் கூறப்பட்டபோது 4000 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஓடிச்சென்று அந்த வாகனங்களில் ஏறினார்கள். அவர்களை மீண்டும் விரைவில் அந்த தாய்மாரிடம் ஒப்படையுங்கள். நீங்கள் என்றுமே தமிழ் தாய்மார்களின் உள்ளத்தில் நிலைத்திருப்பீர்கள் என்றேன். அதற்கு எந்த பதிலுமே அவர் கூறவில்லை.

அடுத்த விடயத்தை நான் கூறமுன்னமே அவரே யூகித்து என்னிடம், நான் உங்களிடம் எதிர்பார்த்த விடயம் வேறு. அதனை நீங்கள் கூறவில்லையே என்று கூறிவிட்டு தமிழ் மக்களின் உயிர் மூச்சு கல்விதான். இங்குள்ளவர்களில் அதிகமான மாணவர்கள் வைத்தியர்களாகவும் பொறியிலாளர்களாகவும் வருகின்றனர்.

சிங்கள்வர்க்ள் கலைதுறையிலேயே ஆர்வம் செலுத்துகின்றனர். உங்களை பார்க்க எனக்கு பொறாமையாக இருக்கிறது என்றார். அதற்கு நான் இப்போது கூற நினைத்ததும் அந்த விடயம் தான் என்றேன்.

இந்த உரையாடல் நடந்து இன்றுடன் நான்கு வருடங்களும் ஒரு நாளும் ஆகின்றன. இன்று நான் பார்க்கிறேன் ஏற்பட்டுள்ள மாற்றங்களை. அத்தனை மாற்றங்களும் தற்போது ஏற்பட்டுள்ளன. அதனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆறாவதாக நான் உங்களிடம் கூற விரும்பும் விடயம் என்னவென்றால் ஜனாதிப்தி ஏழைகளின் நண்பன். நான் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றி பேசப்போகிறேன். நான் யாரையும் குறை சொல்லப்போவதில்லை. குற்றம்சாட்ட வேண்டிய தேவை எனக்கில்லை. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு முதலாளித்துவ சிந்தனையுள்ள கட்சி. சிறிமா ஆட்சிக்கு வந்து 35 வருடங்களாகின்றன. அவருக்குப் பின்னர் நான் பார்க்கும் ஏழைகளின் தலைவர் இவர் தான்.

நான் உங்களிடம் கேட்பதெல்லாம் ஒன்றுதான். எதிரணிக்கு வாக்களித்து தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகளை இடைநிறுத்தி விடாதீர்கள். எமக்கு இரு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைத்துக்கொடுப்பதாக கூறியுள்ளார். அடுத்த விடயம் எமது மாவட்டத்திற்கு ரயில் பாதை அமைத்துக்கொடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளார். எமக்கு அவை தேவை. அந்த அபிவிருத்திப் பாதைகளை நீங்கள் மாற்றமாட்டீர்கள் என்று நர்ன் நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலமைச்சரின்....

இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் அவர் இவ்வாறு நாசுக்காக முதலமைச்சரை கடுமையாக சாடினார்.

உங்களின் கைகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள பிரச்சினைகள், நெல்சிப் திட்டம், மக்களின் கோடிக்கணக்கான பணம் சுரண்டப்பட்டுள்ளது. அதற்கு என்ன பதில். கோடிக்கணக்கான நிதி அரச ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் அதற்கான சேவைகள் வினைத்திறனாக செய்யப்பட்டுள்ளதா? அதற்கான பதில் என்ன? நாங்கள் இதை சரியாக ஒழுங்குபடுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள மக்கள் அனைவரும் நம்புகிறார்கள் முதலமைச்சர் ஒரு நடவடிக்கை எடுத்தால் அது சரியாக இருக்கும் என்று.

ஆனால் அவ்வாறு அதிகாரங்களை பயன்படுத்தாது இருப்பது கவலையளிக்கிறது. முதலமைச்சர் எவ்வளவு வேகமாக செயற்படவேண்டும். ஆனால் அந்நிலை இன்னும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஜனாதிபதி...

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தேர்தல பிரசாரக் கூட்டங்களில் உரை நிகழ்த்தவுள்ளார். (25)

## சனத்திரள்...

கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார், பிரதியமைச்சர் பிரபாகணேசன், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அஸ்வர், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் என்று பெருந்திரளான பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நியதிச்....

முக்கியமானவை. அவை இல்லாது எதுவும் செய்யமுடியாது. நியதிச் சட்டமும் நெறிப்படுத்தலுமே மிக முக்கியமானது. முதலமைச்சர் நேற்று தெரிவிக்கையில் ஆளணிப் பற்றாக்குறை என்று சொன்னார். அவ்வாறு சொல்லாது உங்களது நானாவித செலவீனங்களில் ஒப்பந்த அடிப்படையில் ஆளணிய்ப் பெற்று அவற்றை உருவாக்க வேண்டும்.

நாம் நியதிச் சட்டம் உருவாக்குவதில் பின்னடைவிலேயே இருக்கிறோம். இந்த வருடத்திலாவது அதைச் செய்யுங்கள். அலுவலக பற்றாக்குறை தீர்க்கப்பட்டு நியதிச் சட்டம் உருவாக்குவது துரிதப்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை வல்வெட்டித்துறை நகரசபையின் நடவடிக்கைகளை நிறுத்தியுள்ள அதேவேளை அதற்கான ஏதேனும் நடவடிக்கை எடுங்கள். சபையை 3 மாத காலம் முடக்கிவைத்து மீண்டும் அதை புதுப்பித்துள்ளீர்கள். அது உங்கள் அதிகாரம். அதற்கு நடவடிக்கை எடுங்கள்.

அதேபோல இந்திய வீடமைப்புத் திட்டத்தில் குறைபாடுகள் உள்ளதாக தெரிவித்துள்ளீர்கள். அதுபோல் நீங்கள் கொடுத்துள்ள வீடமைப்புத் திட்டத்திலும் கள்ளப்பாட்டைச் சேர்ந்த ஒரு செல்வந்தருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அபிவிருத்தியை...

இருண்ட யுகத்தை மாற்றி வளமான எதிர்காலத்தை நோக்கி பயணம் செல்ல வேண்டியுள்ளது. வட பகுதியில் 27 வருட காலமாக மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை அத்தேர்தலையும் நாமே நடத்தினோம்.

இந்த முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் எடுக்கும் முடிவு முழு நாட்டுக்குமான முடிவாகும். நீங்கள் எந்த அரசோடு இருக்கப்போகிறீர்கள் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். இந்த பகுதிகளில் நாம் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிட்டு செயற்படுத்தி வருகிறோம்.

இங்குள்ள பாதைகளைப் பாருங்கள் பாடசாலைகளைப் பாருங்கள் ஆஸ்பத்திரிகளை பாருங்கள் மின்சார திட்டங்களைப் பாருங்கள் எல்லாமே நாம் உங்களுக்கு செய்து தந்துள்ளோம். மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை அமைத்துத் தந்துள்ளோம். இந்த ஆய்வு கூடங்களின் மூலம் நீங்கள் உரிய பயனைப் பெற வேண்டும். தொழில் பயிற்சி நிலையங்களிலும் பயன் பெற வேண்டும். இந்த அரசின் கதவுகள் உங்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.

அரச சேவையை பொதுச்சேவையாக, பகிரங்க சேவையாக மாற்றினோம். இன்று அரச சேவை சுவர்ணமயமான சேவை என்றால் அது மிகையாகாது. அரச சேவையாளர்களை 3 இலட்சமாக குறைப்பதற்குத்தான் கடந்த கால ஆட்சியாளர்கள் முயன்றார்கள். ஆனால் நாம் அரச சேவையை கௌரவமான சேவையாக மாற்றியமைத்தோம். அரச சேவை என்பது ஏழை மக்களின் கண்ணீரை துடைக்கக்கூடியது.

கடந்த நவம்பர் மாத வரவு செலவுத் திட்டத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு புதிதாக தொழில் வாய்ப்புகளை வழங்கவுள்ளேன். அதற்காக தயாராகுமாறு இங்குள்ள இளைஞர் யுவதிகளையும் நான் கேட்டுக் கொள்கிறேன். பொய் பிரசாரங்களை நம்பி ஏமாற வேண்டாம்.

சகல இன மக்களும் கைகோர்த்து முன்னோக்கிச் செல்லக்கூடிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பவுள்ளேன். இன ரீதியாக, மத ரீதியாக பிரிந்திருந்தால் நாம் ஒருபோதும் முன்னேற மாட்டோம். நாடும் முன்னேற முடியாது. இந்நாட்டை சிலர் பின்னோக்கிச்செல்ல முனைகிறார்கள்.

ஈரான், லிபியா, பாலஸ்தீன், எகிப்து ஆகிய நாடுகளுக்கு நடந்த கதி என்ன? அதற்கு இடமளிக்க முடியாது. மீண்டும் பழைய யுகத்துக்குப்போக நாம் தயாரில்லை. பாகிஸ்தானில் கொடிய மதவாதிகள், சிறுவர், ஆசிரியர்கள், அதிபர் என 168 பேரை மிலேச்சத்தனமாக கொலை செய்துள்ளனர். இதனைக் கண்டித்த நான், பாகிஸ்தான் பிரதமருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டேன். மீண்டும் அத்தகைய ஒரு நிலைமைக்கு எமது நாட்டில் இடமளிக்க முடியாது.

பிறக்கப்போகும் பிள்ளைக்கும், பிறந்த பிள்ளைக்கும் நல்லதொரு இலங்கையை உருவாக்க வேண்டும். தலைவர்கள் எதுவும் சொல்லுவார்கள். ஆனால் அவர்களது பிள்ளைகள் இங்கில்லை. அவர்கள் கல்வி கற்பதும் வெளிநாடுகளில் தான். எனவே அவர்கள் ஏதேதோ சொல்லிவிட்டுப் போவார்கள். ஆனால் சகல இன மக்களது பிள்ளைகளையும் பாதுகாக்க வேண்டிய உரிமை எனக்குண்டு. எனவே நல்லதொரு உலகத்தை கட்டியெழுப்புவதற்காக நாம் அனைவரும் கைகோர்த்து முன்னோக்கிச் செல்வோம் என்றும் தெரிவித்தார்.

## பாரபட்சமற்ற...

நான் உங்கள் மத்தியில் கொண்டு வந்துள்ளேன். 13 ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாகவும் அதனை செழுமைப்படுத்தும் விதம் தொடர்பாகவும் நான் முன்னைய ஜனாதிபதிகளான பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க, சந்திரிக்கா மற்றும் பிரதம்ராயிருந்த ரணிலிடம் கூட விவாதித்தேன்.

ஆனால் எவருமே அதை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. ஆனால் தற்போதய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்ட போது அவராகவே முன்வந்து இச்சட்டத்தினை முன்வைத்தார். இதன் மூலமே நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ள முடியும், தமிழ் மக்களின் நன்மையினை யார் முதன்மையாக கருதுகின்றவர்?

ஆனால் துரதிஷ்டவசமாக வட்மாகாண ஆட்சி முறை தமிழ் தேசிய கூட்டமைப்பினரின்கைகளில் விழுந்து விட்டது. ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள். அவர்களுக்கு தொடர்ந்து ஏதாவது ஒரு பிரச்சினை வேண்டும், அதன் மூலமே அவர்கள் தமது ஆட்சியினை கொண்டு செல்வர். ஆடத் தெரியாதவனுக்கு மேடை சரியில்லை என்று கூறுவதைப் போல் அவர்களது செயற்பாடு விளங்குகிறது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் போது அதிகளவிலான பணத்தினை ஒதுக்கியது வட மாகாணத்திற்கு மட்டுமே.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அப்பணத்தினை அபிவிருத்திக்கு பயன்படுத்தவில்லை. அபிவிருத்திக்கு பயன்படுத்தாத அப்பணம் தற்போது அரச திறைசேரிக்கு செல்லப்போகிறது. ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்தாமல் வைத்திருந்தவர்கள் ஒருபக்கம், வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவிலான நிதியை வட மாகாணத்திற்கு ஒதுக்கியவர் இன்னொரு பக்கம், இதன்மூலம் நீங்களே புரிந்து கொள்வீர்கள் எந்தப் பக்கம் நன்மைபயக்கும் சிறந்த பக்கமென.

வடமாகாணத்திற்கு மட்டும் சுமார் 5987.78 மில்லியன் பணத்தொகை ஒதுக்கிய போதும் அதில் செலவு செய்யப்பட்டது. 40 சதவீதம் மட்டுமே மிகுதி திறைசேரிக்கே செல்லவுள்ளது. காக்கை குருவிகளுக்கு கூட வடமாகாண சபை அதிகாரம் கிடைத்தால் சுள்ளிசுள்ளிகளாக சேர்த்தாவது அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருக்கும். ஆனால் இன்று வடமாகாண சபையின் ஆட்சி குரங்குகளின் கைகளில் மாட்டிக் கொண்டுவிட்டது.

நிரந்தர அரசியல் ஆட்சியை அடைந்து கொள்வதே எமது அழிவுகளுக்கு கிடைக்கும் பலனாகும். கடந்த காலங்களில் தேர்தலில் செய்த தவறுகளை இம்முறையும் செய்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் நம்பிக்கையுடன் என் பின்னே வாருங்கள் நான் அபிவிருத்தியையே எண்ணக்கருவாக கொண்டுள்ளவ்ரிடம் உங்களை அழைத்துச் செல்கிறேன்.

தமிழ் மக்களை பாதுகாப்பதும் நிச்சயமான கௌரவமான அரசியலைப் பெற்றுக்கொள்வதுமே எனது முதலாவது இரண்டாவது மூன்றாவது முன்னுரிமை மிக்க முக்கிய விடயமாகும். இவற்றைவிடவும் பல அபிவிருத்தி பணிகள் எமது அரசினால் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

எமது கடல் பிரதேசத்தில் இந்திய கடற்படையினரை உள்நுழைய விடாதுமெற்கொள்ளும் அபிவிருத்திப்பணி, கள்ளப்பட்டில் துறைமுகம் அமைக்கும் திட்டம், வடமாகாணம் பூராகவும் உள்ள கடலோர 257 கிராமங்கள் அபிவிருத்தி பணி, நந்திக்கடல் புனரமைப்பு இதன் மூலம் 300 குடும்பங்களுக்குரிய வாழ்வாதார அபிவிருத்தி, யாழ். பல்கலைக்கழக கடற்துறை அமைப்பு பணி அபிவிருத்தி, இழந்த உறவுகளுக்கு செலுத்தும் மரியாதையும் முகாம்களிலிருக்கும் உறவுகளை மீட்கும் நடவடிக்கை, காணிப்பங்கீடு, அழிந்த 15,000 வீடுகள் புனரமைப்பு, மின்சாரம் வழங்கும் திட்டம் அவற்றுள் 60 சதவீதம் பூர்த்தி மிகுதி 40 சதவீதம் வெகுவிரைவில், வயல் காணிகள் பங்கீடு, வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்கள்,சமுர்த்தி முத்திரை எண்ணிக்கை அதிகரிப்பு என பல்வேறு விதமான அபிவிருத்தி பணிகள் ஜனாதிபதியால் வட, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அமைச்சர் அக்கூட்டத்தில்தெரிவித்துள்ளார்.

# மகிந்தவின் வெற்றியில் பங்காளிகளாக மாறுங்கள்

## கிளிநொச்சியில் சந்திரகுமார் எம்.பி. அழைப்பு


முற்றாக அழிந்து போன கிளிநொச்சியை இந்த ஐந்து வருடத்தில் கட்டியெழுப்பிய ஜனாதிபதியின் வெற்றியில் கிளிநொச்சி மாவட்ட மக்களும் பங்குகொள்ள வேண்டும் எதிர்வரும் மாதம் எட்டாம் திகதி வெற்றி பெறவுள்ள ஜனாதிபதியின் வெற்றியில் கிளிநொச்சி மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்திலே யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத பல சாதனைகளை நாம் செய்வதற்கு ஜனாதிபதியினுடைய ஆதரவே இருந்தது என்பதை சொல்லியாக வேண்டும். ஜனாதிபதியைத் தெரிவு செய்வதன் ஊடாக கடந்த காலத்தில் நாம் பெற்ற வெற்றிகளைப் போல எதிர்காலத்திலும் மகத்தான வெற்றிகளைப் பெறுவோம்.

உலகம் வியக்கின்ற ஒரு தலைவராக ஜனாதிபதி உள்ளார். ஆசியாவிலே அவர் ஒரு ஆச்சரியம் தான். ஏனென்றால் யாரும் நம்பக்கடினமான வெற்றிகளையும், சாதனைகளையும் செய்த ஒருவராக அவர் இருக்கிறார் எனத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஜனாதிபதி பத்தாவது தடவையாக வந்துள்ளார். அவர் ஒவ்வொரு முறையும் வருகின்ற



போது எமது மாவட்டம் ஏராளமான நன்மைகளை பெற்றுள்ளது.

கடந்த ஐந்து வருடத்தில் கிளிநொச்சி மாவட்டம் அபிவிருத்திக்காக சுமார் 61 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை பெற்றுள்ளது. வடக்கில் கிளிநொச்சி மாவட்டமே அபிவிருத்திக்கு அதிக நிதியை பெற்ற மாவட்டமாக காணப்படுகிறது. ஜனாதிபதி கிளிநொச்சி மக்கள் மீது கொண்டுள்ள விசேட கரிசனை காரணமாகவே இந்தளவு நிதியினை ஒதுக்கியுள்ளார்.

எனவே கிளிநொச்சி மக்களாகிய நாங்கள் நன்றிகடன் பட்டவர்களாக இருக்கின்றோம். எங்கள் மீது அதிக அக்கறையும், கரிசனையும் கொண்ட ஜனாதிபதிக்கு கிளிநொச்சி மக்களும் தங்களுடைய ஆதரவை செலுத்த கடப்பாடுடையவர்களாக உள்ளனர். எனவே அதனை நாங்கள் இம்முறை நிரூபித்துக் காட்டவேண்டும்.

ஜனவரி எட்டாம் திகதி தேர்தலில் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களித்து அதனை நிரூபிக்க வேண்டும். எனக் கேட்டுக்கொண்டார்.

எங்கள் மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்ட, எங்கள் பிரதேசங்களின் அபிவிருத்தியில் அதிக அக்கறை செலுத்துகின்ற ஜனாதிபதியின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும். அதன் மூலம்தான் நாங்கள் மேலும் முன்னோக்கி பயணிக்க முடியும், எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும். இந்த நாட்டில் அனைத்து மக்களும் விரும்பிய மாற்றத்தை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு எங்கள் ஆதரவை வெளிப்படுத்தி அவரின் வெற்றியில் நாங்களும் பங்கு கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்,

இந்த தடவை கிளிநொச்சி மக்கள் தவறான வழிநடத்தல்களுக்கு பின்னால் செல்லாது சரியான முடிவை எடுத்து ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு தங்களுடைய ஆதரவை வெளிப்படுத்துவார்கள். நிலையான அமைதிக்கும், நிரந்தரமான தீர்வுக்கும் ஒரே வழி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைப்பதே எங்களுக்காக, எங்கள் உரிமைகளுக்காக, எங்கள் எதிர்காலத் தலைமுறைக்காக எங்கள் இந்தக் கடமையைச் செய்வோம் என்றும் கேட்டுக் கொண்டார்.

# மைத்திரியுடன் ஒப்பந்தம் எதுவும் இல்லை

## சுமந்திரன் மறுப்பு

எதிரணி பொது வேட்பாளருடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எந்தவித இரகசிய ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சிலாபத்திலே இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையே இரகசிய உடன்படிக்கை ஒன்று உள்ளதாக பகிரங்கமாக கூறியிருந்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே சுமந்திரன் இதனைத் தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்பு பிரதேசசபையில் கட்சி உறுப்பினர்களுக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வு நேற்றுக் காலை ஆலையடிவேம்பு தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பு முடிந்த பிற்பாடு ஊடகவியலாளர்களது கேள்விக்கு பதிலளிக்கும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

# பாதீடு தயாரிக்கும் போது ஆலோசனை பெறாதது ஏன்?

## மாகாண அமர்வில் கேள்வி


பாதீடு தயாரிக்கும் போது எங்கள் ஆலோசனைகள் பெறப்படவில்லை. யாரோ தயாரித்த பாதீட்டுக்கு எங்களிடம் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டிருக்க வேண்டும் என தனது தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் ஆனந்தி சசிதரன்.

வடமாகாண சபையில் 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் குழு நிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு சாடினார். பாதீடு தயாரிக்கப்பட்டமை தொடர்பில் தமது கருத்துக்களை கேட்கவில்லை என ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமது ஆதங்கத்தைத் தெரிவித்த நிலையில் அனந்தி சசிதரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தில் சமூக சேவைகள் விஸ்தரிக்கப்படவேண்டும். ஒதுக்கப்பட்ட நிதி சொற்பமாக இருக்கின்றது. சமூக சேவைகள் தான் மிக முக்கியமானதாக இருககின்றது. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஒரு வீதத்தை ஏனும் வழங்க முடியாத அள்விற்கு இந்த பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அடுத்துவரும் ஆண்டிலாவது எம்மை அழைக்காது விட்டாலும் எமது கருத்துக்களையாவது கேட்டுக்கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கே.பி.யுடன் அமைச்சர் நேற்று சந்திப்பு



கிளிநொச்சியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் பணிப்பாளர் மற்றும் சிறுவர்களுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

கிளிநொச்சியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் பணிப்பாளர் கே.பி. என அழைக்கப்படும் கே.பத்மநாதன் செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு முன்பாக நேற்று ஜனாதிபதியின் வருகைக்காக காத்திருந்தபோது அமைச்சர் அவ்விடத்திற்கு வருகைதந்த நிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் முன்னேற்றம் தொடர்பில் பத்மநாதனுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

# மருத்துவ மனைக்கான காணி மீண்டும் ஒப்படைப்பு

(திருகோணமலை)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த திருகோணமலை, கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு சொந்தமான காணி வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் நேற்று மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டிலிருந்து இந்தக் காணி இராணுவத்தின் தேவை கருதி நிர்வகிக்கப்பட்டு வந்ததாக இராணுவ ஊடகப் பணிப்பாளர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.

கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு சொந்தமான சுமார் 80 பேர்ச் காணி இராணுவத்தின் 22 ஆவது படையணியால் நிர்வகிக்கப்பட்டு வந்ததாகவும் இராணுவ ஊடகப் பணிப்பாளர் குறிப்பிட்டார். இந்தக் காணியை மீள ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் 22 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி ஆகியோரின் முன்னிலையில் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் காணி மீள ஒப்படைக்கப்பட்டதாக பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர மேலும் கூறினார்.

# ஹிருணிகாவின் அங்கத்துவம் நீக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து எதிர்க் கட்சியில் இணைந்து கொண்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவின் அங்கத்துவத்தை ஆளும் கட்சி இரத்துச் செய்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த கடிதத்தை ஹிருணிகா தனது பேஸ்புக் கணக்கில் சேர்த்துள்ளார். நாங்கள் கட்சியை விட்டு செல்லவில்லை. உங்களது ஊழல் ஆட்சியை விட்டே சென்றோம் என ஹிருணிகா அதில் குறிப்பிட்டுள்ளார்.



மட்டக்களப்பு - சந்திவெளி, பாலையடித்தோணா பிரதேச கடற்பகுதியில் உயிருடன் சுமார் 5 அடி நீளமான டொல்பின் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது. சிறிது நேரத்தின் பின்னர் மீனவர்கள் டொல்பினை கடலுக்குள் மீண்டும் விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சர் விமலின் சகா மைத்திரியுடன் இணைவு

(கொழும்பு)

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் அக்மின தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி மகேஷ் மடவல எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

நேற்று ஹபராதுவ பகுதியில இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சட்டத்தரணி மகேஷ் மடவல ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் நெருங்கிய ஆதரவாளராகவும் விமலின் நம்பிக்கைக்கு உரியவராகவும் மடவல இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.